விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(C-1372)

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 09 புதன்கிழமை (24.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 187

# இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை

## பிரதமர் உறுதியாகத் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கிலிருந்து இராணுவ முகாம்களை அகற்றும் தீர்மானம் எவையும் எடுக்கப்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவ்வாறான நடவடிக்கையை இராணுவம் எடுத்திருக்குமானால் அதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (23 ஆம் பக்கம் பார்க்க)

வித்தியா படுகொலை விவகாரம்

## சிறப்பு விசாரணை அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம் !

(கொழும்பு)

புங்குடுதீவில் மாணவி விததியா கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப பட்டு படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, அங்கு பதற்றநிலை ஏற்பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்த சிறப்பு பொலிஸாரின் விசாரணை அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் புங்குடுதீவு மக்களால் பிடிக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

ஆனால், இச்சந்தேகநபர் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவரின் உத்தரவின் பேரில் பின்னர் விடுவிக்கப் பட்டிந்தார்.

இந்நிலையில், பொலிஸ்மா அதிபரிடம் 24 ஆம் பக்கம் பார்க்க....

## நாடாளுமன்றம் இன்று கலைப்பு?

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இன்று நாடாளுமன்றத்தை கலைக்கலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசியல்வாதிகளிடம் தெரிவித்துள்ளதாக ஆங்கில இணையம் ஒன்று தெரிவித்துள்ளது.

இன்று மாலையளவில் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்று, புதிதாக அமைக்கப்பட்ட மனோ கணேசன், அமைச்சர் திகாம்பரம், இராஜாங்க அமைச்சர் ராதாகிருஸ்ணன் ஆகியோரை கொண்ட குழுவிடம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான 20-வது சீர்திருத்தம் தொடர்பில் இணக் 24 ஆம் பக்கம் பார்க்க....

## வன்செயலில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்க:

### நீதிபதி இளஞ்செழியன் பொலிஸாருக்கு பணிப்பு



(யாழ்ப்பாணம்)

குற்றச்செயல்கள், விதியோர சண்டித்தனங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் வன்செயல் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

அத்துடன் தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு யாரும் தொந்தரவு செய்தால் உடனடியாக கைது செய்யுமாறும் உத்தரவிட்டார்.

மல்லாகம், சுன்னாகம் மற்றும் ஏழாலைப் பகுதிகளிலும், தீவுப் பகுதிகளிலும் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் குறித்து அப்பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அதில தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதி 24 ஆம் பக்கம் பார்க்க....

## தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலை மீளாய்வு செய்யும் அரசு

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலை புதிய அரசாங்கம் மீளாயவு செய்யும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட இந்த தடைப்பட்டியலில் 05 அல்லது 06 ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்தவர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்த தடை செய்யப்பட்டுள்ள பட்டியலில் இருக்கும் அனைவரும் தீவிரவாதிகளா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ள நிலையில், இந்த தடைப்பட்டியலின் நம்பகத்தன்மையை மீண்டும் உறுதி செய்யும் நோக்கில் அதனை மீளாய்வு செய்யும் வேலைத்திட்டத்தில் புதிய அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை மீண்டும் தாய்நாட்டிற்கு அழைக்கும் நோக்குடனேயே புலம்பெயர்ந்தோருக்கான விழா ஏற்பாடு செய்யப்படுகின்றது.

நாம் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுடனும் பேச்சு நடத்துகின்றோம். இதன்படி பிரிவினைவாதம் இல்லாத ஒன்றிணைந்த இலங்கையை 24 ஆம் பக்கம் பார்க்க....

## நாமலின் ஆதரவு மகிந்தவுக்கு இல்லை

(கொழும்பு)

எனக்கு தெரிந்த வகையில் நாமல் ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதியின் மூத்தமகன். எனினும் தந்தையை பிரதமராக்கும் எந்த ஒரு கூட்டத்திலும் அவர் கலந்து கொள்வதில்லை என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகல்ல, வெயன்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனது தந்தைக்காக ஏதேனும் கூட்டம் ஏற்பாடு செய்தால் மகன் என்ற ரீதியில 24 ஆம் பக்கம் பார்க்க....

## சபாநாயகரினால் நிராகரிப்பு

(கொழும்பு)

20-ம் திருத்தச் சட்டத்தின் ஒத்திவைப்பு விவாதங்கள் நாடாளுமன்றில் இடம்பெற்று வருகின்றது.

20-ம் திருத்தச் சட்டத்தின் ஒத்திவைப்பு விவாதங்களுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் வெளியிட்ட ஆட்சேபனைகளை சபாநாயகர் நிராகரித்துள்ளார். 24 ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமர் வேட்பாளராக மகிந்த போட்டியிட முடியாது

ஜனாதிபதி திட்டவட்டம்



(கொழும்பு)

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறியது பொய்யாக இருந்தாலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மைத திரிபால 23 ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு இலட்சம் பேருக்கு 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு

## பிரதமர் அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகள் ஒரு இலட்சம் பேருக்கு எதிர்வரும் 5 வருடங்களுக்குள் வேலைவாய்ப்புக்களை வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் முன்னணியின் பிரதிநிதிகளுடன் அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது,

இவ்வாறு வேலைவாய்ப்புக்களை வழங்குவது மட்டுமன்றி முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் விரிவாக்கப்படும், கல்வித்துறை பலமாக்கப்படும்.

எனவே இவை எல்லாவற்றையும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் அடுத்த தேர்தலிலும் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற வேண்டும்.

தற்போது எமது நாட்டில் புதிய ஆட்சி மாற்றத்தின் கீழ் பாரிய புரட்சி ஒன்று ஆரம்பித்துள்ளது.

இப் புரட்சியானது எமது நாட்டினை இலஞ்சமற்ற ஊழலற்ற, மோசடிகளற்ற நாடாக உருவாக்கிய பின்னரே ஓய்வடையும்.

இந்நாட்டில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு சிறந்த எதிர்காலத்தினை வழங்க ஐக்கிய தேசிய கட்சியினால் மட்டுமே முடியும்.

அத்துடன் இந்த நாட்டின் ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்றுக் கொண்டதை தொடர்ந்தே நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழக்கூடியதாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)


**பதவி : நிர்வாக உத்தியோகத்தர்**

தகைமை :
1. G.C.E உயர்தரம் அல்லது அதற்கு மேலான கல்வி தகைமை
2. ஆங்கில மொழி திறனும் சிங்கள மொழி பயிற்சியும் விரும்பத்தக்கது.
3. கணனி , இணையதளப் பதிவேற்றத்தில் அனுபவம்
4. கடமையில் முன் அனுபவம்

வயதெல்லை : 35–55

30.06.2015ம் திகதிக்குள் அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பிக்கலாம். (இ)

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

யாழ் விழிப்புலனற்றோர் சங்கம்
28, 1ம் ஒழுங்கை
கோயில் வீதி
யாழ்ப்பாணம்

தொ.இல – 021 222 7336
மின்னஞ்சல் முகவரி : voiceofvis@gmail.com

**JAFFNA MEDICAL ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING 2015**
**NOTICE OF MEETING**

Notice is hereby given that the postponed Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association which was scheduled on 12 th June 2012 (friday) at 11.00 am due unavoidable circumstances will be held on 29 th June 2015 (Monday) at 11.00 am at conference hall of Teaching Hospital Jaffna.

By order of the committee of Management.

Hony.Secretary.
21st June 2015

(933)

**மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்**



திருமதி
சிவராஜசோதி ஸ்ரீதரன்
(SLTS-1)
யா/இராமநாதன் கல்லூரி

எமது பாடசாலையில் நீண்டகாலம் சேவையாற்றி ஓய்வு பெறும் ஆசிரியை திருமதி சி. ஸ்ரீதரன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

1979-1992 வரை தொண்டராசிரியர் - யா/இராமநாதன் கல்லூரி
01.09.1992 - 31.07.1998 வரை ஆசிரியர் யா/இராமநாதன் கல்லூரி
01.08.1998- 31.12.2001 வரை ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர் யா/இராமநாதன் கல்லூரி
01.01.2002 - 31.12.2011 வரை ஆசிரியர் உரும்பிராய் இந்துக் கல்லூரி
01.01.2012 - 23.06.2015 வரை ஆசிரியர் யா/இராமநாதன் கல்லூரி

(C-1368) ஆசிரியர் கழகம் - யா/இராமநாதன் கல்லூரி


# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை சனியன்று திருமலையில் ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்துக்காக காணாமல்போனோர் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அமர்வு, எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இடம்பெறவுள்ளது என ஆணைக்குழுவின் நிர்வாக உத்தியோகஸ்தர் எச்.டபிள்யூ. குணதாஸ தெரிவித்தார்.

ஆணைக்குழு, குறித்த தினங்களில் காலை 09 மணியிலிருந்து மாலை 05 மணி வரை சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளது. முதல் இரு தினங்களான சனிக்கிழமை 157 பேரும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 169 பேரும் மூதூர் பிரதேச செயலகத்தில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி குறித்த இரு தினங்களும் மூதூர், சேருவில, ஈச்சிலம்பற்று, கிண்ணியா மற்றும் தம்பலகாமம் ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 326 பேர் சாட்சியமளிப்பதற்கென அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான சாட்சியமளிப்புத் திகதி தொடர்பான கடிதங்கள், ஆணைக்குழுவினால் ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 29-ம் திகதி திங்கட்கிழமை 181 பேரும் விசாரணை இறுதித் தினமான 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை 170 பேரும் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் காணாமல் போனோர் பற்றிய சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளனர்.

இதற்கென பதவிசிறிபுர, கோமரங்கடவெல, குச்சவெளி, கந்தளாய் மற்றும் மொறவெள ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவிலுள்ளவர்கள் சாட்சியமளிப்பதற்கென அழைக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன், காணாமல்போனோர் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு தமது உறவுகள் காணாமல்போனது தொடர்பில் விண்ணப்பிக்காதோர் விசாரணை நடைபெறும் அனைத்து தினங்களிலும் புதிதாக தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற நீதிபதி மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தலைமையில் முன்னதாக இயங்கிவரும் இந்தக் குழுவில் நீதியமைச்சின் சட்ட வரைஞர் திணைக்கள முன்னாள் பிரதி சட்ட வரைஞரும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆணையாளருமான மனோகரி இராமநாதன், குடிசன மதிப்பீட்டு புள்ளிவிவரத் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் ரீ.வி. பிரியந்தி சுரஞ்சனா வித்யாரத்ன ஆகியோரடங்கிய குழுவினர் காணாமல்போனோர் பற்றிய விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வழமையான தமது விசாரணையில் நாளொன்றுக்கு 60 பேரின் விசாரணை மனுக்கள் விசாரிக்கப்பட்டு வந்ததாகவும் ஆனால், இம்முறை நாளொன்றுக்கு 120 பேர் என்ற அடிப்படையில் விசாரிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு கூறுகின்றது.

அதற்கேற்றபடி ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.ஏ. திலகரத்ன ரத்னாயக்க மற்றும் அமைச்சுக்களின் ஓய்வுபெற்ற செயலாளர் ஹேவா ஹெற்றிகே சுமணபால ஆகிய இரு அங்கத்தவர்கள் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

சாட்சியமளிப்பதற்காக அழைக்கப்பட்டவர்கள் குறித்த தினங்களில் உரிய இடங்களுக்குச் சென்று சாட்சியங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (எ-11)

# சம்பளத்துக்காக அதிக கடன் அரசைச் சாடுகிறார் மகிந்த

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் சம்பளம் வழங்குவதற்காக பில்லியன் கணக்கில் கடன் பெற்றுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அன்று அனாகரிக தர்மபால விடம் விசாரணை நடத்தியது போன்று இன்று என்னிடம் விசாரணைகள் நடத்தப்படுகின்றது.

நெடுஞ்சாலைகள் அமைத்துவிட்டு நெடுஞ்சாலைகளின் செலவு எப்படி என்று கேட்கின்றார்கள்.

தற்போது பில்லியன் கணக்கில் கடன் பெற்று தான் சம்பளமேனும் வழங்குகின்றார்கள்.

தர்மபாலவிற்கு அன்று குற்றம் சுமத்தியது போன்று தற்போதைய அரசாங்கம் 05, 06 மாத காலமாக எங்களுக்கு எதிராக குற்றம் சுமத்திக்கொண்டு நாட்டில் எந்த ஒரு செயற்பாடுகளையும் மேற்கொள்ளாமல் இருக்கின்றார்கள்.

இன்று கோபங்களும் பழிவாங்கலும் மாத்திரமே இடம்பெறுகின்றன.

தர்மபாலவை தாக்கியது போன்றே இன்று எங்களையும் தாக்குகின்றார்கள் என முன்னாள் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# இனவாதிகளாக சிங்கள மக்களை வெளிக்காட்டுவதற்கு முயற்சி

## அபயதிஸ்ஸ தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிங்களவர்களை இனவாதிகளாக வெளிக்காட்ட முயற்சிக்கப்படுவதாக பெபிலியான சுனேத்திரா மஹாதேவி பிரிவேனாதிபதி கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 70 வீதமானவர்கள் சிங்களவர்களாகும் இவர்கள் இனவாதிகள் என வெளிக்காட்டும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை நாட்டை பிளவுபடுத்த வழியமைக்கும்.

இன்னும் சில நாடுகளில் நாட்டை பிளவடையச் செய்ய முயற்சிக்கப்படுகின்றது. சிங்களவர்களுக்கு எதிராக கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு இந்த நாடு சிங்கள நாடு என எங்காவது குறிப்பிடப்பட்டுள்ளதா என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் வடக்கில் படையினர் போதைப்பொருள் விற்பனை செய்வதாக வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தியிருந்தார்.

தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்கும் தேசிய கொடியில் காணப்படும் சிங்கத்தை அகற்றி வேறு கொடி அமைக்கவும் அமைச்சரவையில் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டை 12 ஆண்டுகள் ஆட்சி செய்த சந்திரிக்காவிற்கு இந்த நாடு யாருடையது என்பது தெரியவில்லையாம். இவற்றின் ஊடாக மிக நீண்ட காலமாக நாட்டை பிளவுபடுத்த முயற்சிக்கப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.

பராக்கிரமபாகு மன்னருக்கு பின்னர் நாட்டை ஐக்கியப்படுத்திய பெருமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையே சாரும் என மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். (எ-11)

# அநாதரவான நிலையில் விபத்துக்குள்ளான வான்

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் அடையாளம் காணப்படாத வான் ஒன்று விபத்திற்குள்ளான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ்வாகனத்திலிருந்து படுகாயமடைந்த படை அதிகாரியொருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

எனினும் இதுவரை சடலம் உரிமை கோரப்படாது வைத்தியசாலையின் பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுமார் 44 வயதுடைய படை அதிகாரியை அனுமதித்தவர் பின்னர் தப்பித்து சென்றிருப்பதாக கூறப்படுகிறது.

இலக்கத்தகடற்ற குறித்த வான் நேற்று முன்தினமிரவு விபத்திற்குள்ளாகியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த வாகனம் நேற்று மதியம் தாண்டியும் மீட்கப்படாது அநாதரவாக வீதியோரத்தில் கவிழ்ந்த நிலையில் காணப்பட்டது.

படைத்தரப்பு வசம் பயன்பாட்டிலிருந்த இலக்கத்தகடற்ற வான் தொடர்பில் பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி**

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(336)
தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்

# இந்தியப் பிரஜையை நாடுகடத்த உத்தரவு

(கரணவாய்)


**சட்டவிரோதமான முறையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் பிரஜையை உடனடியாக நாடு கடத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.**

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 18ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜையிடமிருந்து 238 நிஜாம் பாக்கு பக்கற்றுக்கள், 800 சல்வார் துணிகள் மீட்கப்பட்டதுடன் இவற்றை அரசுடைமையாக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். சுப்பிரமணியம் செந்தில்குமார் என்ற பிரஸ்தாப நபருக்கு ஒன்பதாக 10 ஆயிரம் ரூபா குற்றப்பணம் அறிவிடப்பட்டது.

மீண்டும் இலங்கைக்கு வந்து இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டால் ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனையும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். அத்துடன் பிரஸ்தாப நபரை உடனடியாக யாழ். பொலிஸ் நிலையத்தினூடாகக் கொழும்புக்கு அனுப்பி இந்தியாவிற்கு நாடுகடத்துமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்
## இன்று நான்காம் திருவிழா



**துயர் சூழ்ந்த நிலை மீட்க வருவாய்**


வயல் சூழ்ந்த இணுவையிலே
அருள் சூழ்ந்த கோயில் கொண்டு
அடியார்க்கு அருளுகின்ற முருகா- எந்தன்
துயர் சூழ்ந்த நிலை மீட்க வருவாய்

பொன்னோடு பொருள் தேடி
போராடும் உலகத்தில்
உன்னோடு மனம் வைத்த ஒருவன்- இவன்
உன் பாதம் பிடிக்கின்ற மனிதன்

கொடியேறி விழாக்காணும்
குதூகலம் கொண்டே நல்
அடியார்கள் வரம்கேட்டு வருவார்- உடன்
அருள் செய்யும் உன் திறத்தினை புகழ்வார்

இணுவை செந்தூரன்

**4 ஆம் உபயகாரர்**




**இவர்களுக்கு மணமகள் தேவை** | **கல்யாண மாலை** | **இவர்களுக்கு மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 66 1/4 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ: B/4651 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 72 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1444 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 74<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில் A/L/ தனியார் தொழில<br>தொ.இ: B/4653 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 52 1/4 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/1449 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 29 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் ஜேமன் PR<br>தொ.இ: B/4656 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 14 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1453 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 14 1/2<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: தொழில் நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B/4660 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1455 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## ராசி பலன்

24.06.2015
(ஆனி 09, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
அட்டமி பின்னிரவு 5.07 மணிவரை
உத்தரம் முன்னிரவு 7.19 மணிவரை
இராகுகாலம் 11.55-1.25 மணிவரை
சுபநேரம் 4.25-5.55 மணிவரை
ஆனி உத்தர தரிசனம்,
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
| --- | --- | --- | --- |
| கேது | | புதன் | சூரி செவ் |
| | | | குரு சுக் |
| | | | |
| | | சனி | சந் ராகு |

**மீனம்:** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், செய் தொழில் மேன்மையுண்டு.

**இடபம்:** கனவுகள் நனவாக அம்பிகையை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கும்பம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், தேவையற்ற விரயங்கள் கூடும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம்.

**கடகம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், உங்களின் திறமைக்கு இன்று பாராட்டுக்கள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், அம்பிகையை வழிபட்டு மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.


**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?


25
மாணவி வித்தியா

01.06.2015 அன்று மாணவி வித்தியாவின் கொலைச் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜராகிய போது 15.06.2015 வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் உத்தரவிட்டிருந்தார்.

தொடர்ந்து 15.06.2015 அன்று சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து கைதிகளை ஊர்காவற்றுறை நீதிமன்றத்திற்கு கூட்டிச் செல்லும் போது யாழ். பண்ணை வீதி நெடுகிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அன்றையதினம் நீதிமன்றிற்கு மாணவி வித்தியாவின் தாய், சகோதரன் மற்றும் உறவினர்கள், சாட்சியாளர்கள் வந்திருந்தனர்.

கூடவே ஊடகவியலாளர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் திரண்டனர்.

ஊர்காவற்றுறை நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாணவி வித்தியாவின் தாய் சரஸ்வதி, சகோதரன் நிசாந்தன் உள்ளிட்டோரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.



### வித்தியாவின் தாய் சரஸ்வதி சாட்சியம்

சிவலோகநாதன் சரஸ்வதி ஆகிய எனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளன. இரண்டு பெண பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் இருக்கின்றார்கள். முதலாவது பெண் பிள்ளை கிரிசாந்தி இரண்டாவது ஆண் பிள்ளை நிசாந்தன் மூன்றாவது பெண்பிள்ளை வித்தியா இவர் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில்படித்து கொண்டிருந்தார்.

எனது மகள் வித்தியாவை கடைசியாக 2015.05.13 அன்று காலை 7.30 மணியளவில் பாட சாலை செல்லும் போது கண்டிருந்தேன்.

அன்று காலை துவிச்சக்கர வண்டியில் பாடசாலை சென்றவர் பிற்பகல் மூன்று மணியாகியும் வீடு திரும்பவில்லை.

எனது மகளைத் தேடி முதலில் எனது மகன் நிசாந்தன் பாடசாலைக்கு சென்றிருந்தார். அதன் பின்னர் நானும் சென்று தேடிப்பார்த்தேன். வித்தியாவை தேடி பாடசாலைக்கு சென்ற மகன் அங்கு விசாரித்தார்.

அன்றையதினம் வித்தியா பாடசாலைக்கு வரவில்லை என கூறியிருந்தார்கள். பாடசாலைக்கு மகள் வரவில்லை என கூறியதனை அடுத்து காவற்துறை பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமாறு கூறியதை அடுத்து, ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்வதற்காக சென்றிருந்தோம். முறைப்பாடு செய்துவிட்டு அங்கிருந்து நாம் வீடு திரும்பும் போது இரவு எட்டு மணி இருக்கும்.

எனது மகன் நிசாந்தனும், இலங்கன் என்பவரும் தேடிச் சென்றனர்.

சிறிது நேரத்தில் மகன் தேடிச் சென்ற திசையில் இருந்து அம்மா..! என குளறிச் சத்தம் கேட்டது. நாம் சத்தம் கேட்ட திசை நோக்கி ஓடினோம்.

அங்கு எனது பிள்ளையின பாடசாலை உடுப்பை கண்டதும் நான் அவ்விடத்திலேயே மயங்கி வீழ்ந்து விட்டேன். மகளின் அருகே என்னால் செல்ல முடியவில்லை. பின்பு எனக்கு மகள் இறந்து விட்டதாக கூறியிருந்தார்கள்.

நானும் எனது மகனும் மகளின் அந்த நிலையை பார்த்ததும். அதனை சொல்லும் நிலையில் இல்லை.

அங்கு வந்தவர்கள் பொலிசாருக்கு முறைப்பாடு செய்திருந்தனர். பின்பு 15.05.2015 பாட சாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எம்மோடு சேர்ந்து வித்தியாவை தேடியிருந்தனர்.



எங்கு தேடியும் மகளைக் காணாததனால் குறிகட்டுவான் பொலிஸ் நிலையத்தில் மறுநாள்காலை 5.30 மணியளவில் வித்தியாவை தேடி நானும் எனது மகனும் அயல வீட்டார் சிலரும் சென் றோம். ஆலடி வீதியில் முச்சக்கர வண்டி சாரதி சுதன் என்ப அன்று பொலிசாருக்கு வாக்கு மூலம் ஒன்றினையும் வழங்கியிருந்தேன்.

சம்பவ இடத்திற்கு வந்திருந்த பொலிசாரிடம் தகவல்களை வழங்கியிருந்ததோடு. முறைப்பாடு செய்வதற்கு நானும் மகனும் சென்றிருந்தோம்.

அங்கு, இவ்வாறான முறைப்பாடுகள் எடுக்க முடியாது. ஊர் வரை விசாரித்திருந்தோம்.

இதற்கிடையில் குறித்த வீதி முழுவதும் தேடிப் பார்த்தோம். வீதியின் மறுபக்கமு நீதிபதியிடமும் இறந்தது எனது மகள் தான் என கூறியிருந்த தாக வித்தியாவின் தாயாரான திருமதி சிவலோகநாதன் சரஸ்வதி சாட்சியமளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவியின் சகோதரன் நிசாந்தன் சாட்சியம்

பசுபதிப்பிள்ளை சிவலோகநாதன் எனது அப்பா, சிவலோகநாதன் சரஸ்வதி எனது அம்மா. நான் எனது குடும்பத்துடன் புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தில் வசித்து வருகின்றேன். நான் எனது குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. நிசாந்தி எனது அக்கா. வித்தியா எனது தங்கை அக்கா யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகப் பிரிவில் கல்வி கற்று வருகின்றார், தங்கை வித்தியா புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் உயர்தரப் பிரிவில் கல்வி கற்று வந்தார்.

நான் எனது தங்கையை 13.05.2015 அன்று காலை தான கடைசியாக கண்டிருந்தேன்.

அன்றையதினம் காலை ஆறு மணியளவில் அருகில் உள்ள இடமொன்றில் வேலி அடைக்கும் தற்காலிக வேலை ஒன்றிற்குச் சென்றிருந்தேன். காலை பத்து மணியளவில் வேலையை விட்டு வீட்டுக்கு வந்திருந்தேன்.

வித்தியா பிற்பகல் மூன்று மணியளவில் பாடசாலையில் இருந்து வீடு திரும்புவது வழக்கம். ஆனால் அன்றைய தினம் மூன்று மணியாகியும் அவர் வீடு திரும்பவில்லை. விசேட வகுப்பு ஏதும் நடத்தப் படுகிறதா? என அறிவதற்காக வித்தியாவின் பாடசாலைக்குச் சென்றிருந்தேன்.

நான் செல்லும் போது பாடசாலை மூடப்பட்டிருந்த காரணத்தினால் எனது வீட்டுக்கு திரும்பி வந்து மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வித்தியாவின் சக மாணவியான லக்சனா என்பவரிடம் சென்று அவரிடம் கேட்டபோது, வித்தியா அன்றையதினம் பாடசாலைக்கு வரவில்லை எனக் கூறியிருந்தார்.

பின்பு நானும் அம்மாவும் வித்தியாவை காணவில்லை என முறைப்பாடு செய்வதற்காக குறிகட்டுவான் பொலிஸ் நிலையம் சென்றிருந்தோம். இதற்கு முன்னர் மற்றொரு மாணவி ஊடாக பாடசாலை அதிபரிடம் தொலைபேசி மூலம வித்தியா பற்றிக் கேட்டிருந்தோம்.

**புருசோத்மன்**

# பாகிஸ்தானில் வெயில் உக்கிரம் பலி எண்ணிக்கை 400 ஆக உயர்வு

பாகிஸ்தானில் உக்கிரமான வெயிலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 400 ஆக அதிகரித்துள்ளது. பாகிஸ்தானின் தெற்கு பகுதியில் 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான வெப்ப நிலை உள்ளது.

நேற்றுக் காலை நிலவரப்படி சிந்து மாகாணத்தில் ஒட்டுமொத்தமாக 400 பேர் பலியாகி உள்ளனர். மாகாண தலைநகர் கராச்சியில் மட்டும் சுமார் 250-க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

மேலும் பலர் வெயில் தொடர்பாக ஏற்படும் காய்ச்சல், உடல் வறட்சி மற்றும் குறைந்த இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரசு வைத்தியசாலைகளில் மட்டும் 341 பேர் பலியாகியுள்ளதாகவும், தனியார் வைத்தியசாலைகளில் வெப்ப பக்கவாதம், உடல் சோர்வு மற்றும் குறைந்த அழுத்தம் காரணமாக மேலும் பலர் பலியாகயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 நாட்களில் மட்டும் வெப்பத்தால் பாதிக்கப்பட்ட 3000 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக கூறிய ஜின்னா வைத்தியசாலை கண்காணிப் பாளரான சீமா ஜமாலி, அங்கு மட்டும் 200 பேர் பலியானதாக தெரிவித்தார்.

அதே போல் அப்பாஸி ஷாகித் வைத்தியசாலையில் 71 பேர் பலியாகி யுள்ளதாக அங்கு பணிபுரியும் வைத்தியரான சயீத் குரேஷி கூறியுள்ளார். தொடர்ந்து சிந்து மாகாணம் முழுவதும் அவசர நிலை பிரகடனம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், வைத்தியர்கள் மற்றும் மருந்தக ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விடுப்பையும் இரத்து செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. இது தவிர அந்நாட்டு இராணுவம் தரப்பில் வெயிலால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (இ-7)






## 15,000 இந்திய செவிலியர்கள் வெளியேற்றப்படும் அபாயம்

பிரிட்டனில் பணிபுரியும் சுமார் 15 ஆயிரம் இந்திய செவிலியர்கள் உட்பட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டுச் செவிலியர்கள் அந்நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிரிட்டன் நாட்டின் புதிய குடியேற்றச் சட்டத்தின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து பிரிட்டன் ராயல் செவிலியர் கல்லூரியின் பொதுச் செயலாளர் பீட்டர் கார்ட்டர் கூறியதாவது,

பிரிட்டனின் புதிய குடியேற்றச் சட்டத்தின்படி 6 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்தும் ஆண்டுக்கு 35 ஆயிரம் பவுண்டுகளுக்கும் குறைவாக ஊதியம் ஈட்டுவோர் அந்நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவர்.

முதல்கட்டமாக, 2011 ஆம் ஆண்டைக் கணக்கில் கொண்டு இந்த நெறிமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளன. தேசிய சுகாதாரச் சேவைகள் நிறுவனம் (என்.ஹெச்.எஸ்.) மூலம் வெளிநாடுகளில் இருந்து செவிலியர்களாக நியமிக்கப் பட்ட சுமார்30 ஆயிரம் பேர் வேலை இழக்க நேரிடும்.

இதில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்திய செவிலியர்கள் ஆவர்.

அவர்கள் ஆண்டுக்கு 21 ஆயிரம் பவுண்டுகள் முதல் 28 ஆயிரம் பவுண்டுகள் வரையே ஊதியம் ஈட்டுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆப்கான் நாடாளுமன்றம் மீது தலிபான்கள் தாக்குதல்

### 7 பயங்கரவாதிகள் உட்பட 9பேர் பலி

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தில் தலிபான் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நிகழ்த்திய தாக்குதலில் ஒரு பெண்ணும், குழந்தையும் உயிரிழந்தனர்.

இரண்டு மணி நேரம் நீடித்த இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட 7 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

அந்த நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சரை அறிவிப்பதற்கான கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

அதையடுத்து அவையில் கூடியிருந்த எம்.பிக்கள் பாதுகாப்புக்காக பதறியபடி ஓடினர்.

நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பிய தொலைக்காட்சிகளில் இந்தக் காட்சிகளும் நேரடியாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன.

தாக்குதல் குறித்து காபூல் நகர பொலிஸ் செய்தித் தொடர்பாளர் அப்துல்லா கரீமி கூறியதாவது, முதலில், நாடாளுமன்றக் கட்டடத்தையொட்டி அமைந்துள்ள சாலையில், தற்கொலை கார் குண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இதில் பயங்கரவாதியொருவர் பலியானார்.

அதையடுத்து, பயங்கரவாதிகள் சிலர் நாடாளுமன்றத்துக்கு முன்பு இருந்த ஒரு கட்டடத்துக்குள் நுழைந்து, ரொக்கெட் குண்டு வீசித் தாக்குதல் நிகழ்த்தினர் என்றார் அவர்.

வெளிப்புறத்தாக்குதலில்ஒருபெண்ணும், ஒரு குழந்தையும் உயிரிழந்ததாக ஐ.நா. அமைப்பினரும், பொலிஸாரும் தெரிவித்தனர்.

உள்துறைஅமைச்சக துணைச் செய்தியாளர் நஜீப் டானிஷ் கூறியதாவது,

தற்கொலை கார் குண்டு வெடிப்பு நிகழ்த்தியவர் உட்பட ஏழு பயங்கர வாதிகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

தொடக்கத்தில் நிகழ்ந்த கார் குண்டு வெடிப்பில் சுமார் 15 பேர் காயமடைந்தனர்.

அதனைத்தொடர்ந்து நாடாளுமன்றக் கட்டடத்தின் மீது பயங்கரவாதிகள் ஏவுகணை குண்டுகள் மூலம் தாக்குதல் நிகழ்த்தினர்.

நாடாளுமன்ற அவைக்கு அடுத்த பகுதி வரை பயங்கரவாதிகள் முன்னேறினர். குண்டு வீச்சில் எழுந்த புகை அவையைச் சூழ்ந்தது.

#### பிரதமர் மோடி கண்டனம்

ஆப்கான்நாடாளுமன்றம் தாக்கப்பட்டதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து சுட்டுரை வலைதளத்தில் அவர் கூறியுள்ளதாவது,

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நிகழ்த்தியிருக்கும் பயங்கரவாதிகளின் செயல் இழிவானதும், கோழைத் தனமானதும் ஆகும்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையஇறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்று மோடி தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வவடிவேலின் மணிவிழாவும் செல்வநாதம் நூல் வெளியீடும்



(யாழ்ப்பாணம்)

யாழ்.தனியார் கல்வி நிறுவன விஞ்ஞான ஆசிரியர் இரா.செல்வவடிவேலின் மணிவிழா மற்றும் செல்வநாதம் நூல்வெளியீடு என்பன எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தர் பரமாச்சாரிய சுவாமிகள், சின்மயாமிஷனின் பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர். மலர் வெளியீட்டில் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியீட்டுரையை நிகழ்த்தவுள்ளார். (இ-3)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் 1 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர்நோய்தடுப்பூசி (A.R.V.) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இம்மாதம் 24ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை சென். றோக் சனசமூக நிலையத்திலும் மு.ப.11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை றெக்கிளமேசன் சன சமூக நிலையத்திலும் இம்மாதம் 25ஆம் திகதி காலை 9மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை தண்ணீர் தாங்கி 1ம்,2ம் குறுக்குத் தெருவிலும் மு.ப.11 மணி தொடக்கம் பி.ப.ஒரு மணிவரை தண்ணீர் தாங்கி 2ம்,3ம் குறுக்குத் தெருவிலும் இம்மாதம் 26 ஆம் திகதி காலை9மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாகவும் மு.ப.11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை 2ம் குறுக்குத் தெரு அன்னை வேளாங்கன்னி முன்பாகவும் இம்மாதம் 29ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை ஜஸ்பிளாண்ட் வீதியிலும் மு.ப.11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை குருநகர் சனசமூக நிலையம் முன்பாகவும் இம்மாதம் 30ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை கடற்கரை வீதி 4ம் குறுக்குத்தெரு சந்தியிலும் மு.ப.11 மணி தொடக்கம் பி.ப.1மணிவரை பாங்ஷால் வீதி 3ஆம் குறுக்குத்தெரு சந்தியிலும் ஜூலை மாதம் 2ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமையிலும் மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை புதுமை மாதா ஆலயத்திற்கு முன்பாகவும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை கொண்டலடி வீதி யிலும் மு.ப.11மணி தொடக் கம் பி.ப.1மணிவரை மவுன் காமல்வீதியிலும் ஜூலை மாதம் 6ஆம் திகதி காலை 9மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை அண்ணாசிலைச் சந்தி யிலும் மு.ப.11 மணி தொடக்கம் பி.ப.ஒரு மணி வரை ஓடக்கரை வீதியிலும் ஜூலை மாதம் 8ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை அடம்பன் வீதியிலும் மு.ப.11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை யூபிலி மகப்பேற்று நிலையத்திலும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணிவரை செபஸ்ரியார் கோவில் அருகாமையிலும் மு.ப.11 மணி தொடக்கம் பி.ப.ஒருமணிவரை குருநகர் சின்ன ஆஸ்பத்திரி ஆகிய இடங்களிலும் வழங்கப்படவுள்ளது. (இ-3)



யாழ். வண்ணை கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

# தமிழக முகாம்களிலிருந்து வரும் மக்களுக்கான ஏற்பாடுகள் என்ன?

## டக்ளஸ் எம்.பி.கேள்வி

யாழ். குடாநாட்டில் தங்களது சொந்த இடங்களிலிருந்து 90களில் வெளியேறி, இந்தியா - தமிழகம் சென்று, அங்கு முகாம் வாழ்க்கை வாழ்ந்து வந்த மக்களை தற்போதைய ஆட்சியில் இலங்கை வந்து மீள்குடியேறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கமைய சில குடும்பங்கள் இலங்கை வந்துள்ள நிலையில், இம் மக்கள் தங்களதுசொந்தநிலங்களில் மீள் குடியேற இயலாத நிலையில் பரிதவித்துவருவதாக தெரிவிக்கின்றனர். எனவே, இம் மக்களின் மீள் குடியேற்றத்திற்கான ஏற்பாடுகள் என்ன? ஈழமக்கள்ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அரசிடம் கேள்விஎழுப்பியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர், தமிழ் நாட்டிற்கு இடம் பெயர்ந்து சென்றிருந்த எமது மக்கள், அங்கு பல்வேறு துயரங்களுக்கு மத்தியில் முகாம் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். தங்களது வாழ்க்கையை ஓரளவிற்குக் கொண்டு செல்லும் இவர்கள், எந்த விதமான பொருளாதாரவசதிகளையும் உடையவர்களல்லர்.

இந்தநிலையில், இலங்கையில் தங்களது சொந்த நிலங்களில் வந்துமீளக் குடி யேறுமாறும், இவ்வாறு வரு பவர்களுக்கு பல்வேறு வசதிகள் செய்துகொடுக்கப்படு மெனறும் தற்போதைய அரசு அழைப்பு விடுத்திருந்தது. இதற்கமைய குறிப்பிட்ட சிலர் இலங்கை வந்துள்ளனர். இவ்வாறு வருகை தந்தவர் கள் கோலாகலமாக வரவேற் கவும் பட்டனர்.

தமிழகத்தில் இம் மக்கள் வாழ்ந்திருந்தபோது, துயரங்கள் நிறைந்திருந்தும், குடியிருக்கத்தக்க வசதிகளை இந்திய அரசு செய்து கொடுத்திருந்தது. எனினும், தங்களது சொந்தநிலங்களில் வாழ வேண்டும் என்ற உணர்வுகளுடனும், இலங்கை அரசு தங்களது மீள் குடியேற்றத் திற்கான வசதிகளைசெய்து கொடுக்கும் என்றநம்பிக்கையுடனும் இலங்கை திரும்பிய இம் மக்கள், இன்று அநாதர வான நிலையில் கைவிடப்பட்டுள்ள தாகக்குற்றஞ்சுமத்துகிறனர்.

இம் மக்களின் மீள் குடியேற்றத்திற்கான வசதிகளைசெய்துகொடுப்பது அரசின் கடமையா கும். இதனை உணர்ந்து அரசு, உடனடி நட வடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென டக்ளஸ் தேவானந்தா மேலும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மண்ணரிப்பினால் பாதிக்கப்பட்டுவரும் மைதானத்தை பாதுகாக்க கோரிக்கை

வடமராட்சி திக்கம் இளைஞர்விளையாட்டுக்கழக மைதானத்தின் இருபக்கமும் வெள்ள வாய்க்கால் காணப்படுவதால் மைதானம் மண்ணரிப்புக்குள்ளாகி வருகின்றது.

எனவே மைதானத்தை மண்ணரிப்பிலிருந்து பாதுகாக்க க்கூடிய தடுப்பு அமைப்பதற்கான செலவாக 10 இலட்சம் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தொகையை உரிய அமைச்சுமூலம் பெற்றுக் கொடுக்க மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆவன செய்யவேண்டுமென திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ-3)




# மஹா சங்காபிஷேகம்

எழுதுமட்டுவாழ் விழுபளை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான மஹா சங்காபிஷேகம்இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11.50 மணிவரை நடைபெறவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று அம்பிகை, விநாயகர், முருகன் ஆகிய பரிவாரமூர்த்திகளுடன்அம் பாளின்வெளிவீதியுலா இடம்பெறும். (இ-3)

# தென்னங்கன்றுகள் விநியோகம்


சுவதேச கணவனை இழந்த பெண்கள் தினம் ஜூன்23 ஆம் திகதி உலகம் பூராவும் கடைபபிடிக்கப்படுகிறது. இத்தினத்தையொட்டி பெண் தலைமைத்துவக் குடும்பத் தலைவிகளுக்கு வாழ்வாதாரமாகத் தென்னங்கன்றுகளை அன்பளிப்பாக வழங்கும் திட்டமொன்றை வடமாகாண சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் முன்னெடுத்துள்ளது.



இதன் தொடக்க நிகழ்ச்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது, வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தென்னங்கன்றுகளை வழங்கி வைத்துள்ளார்.

தென்னை ஆராய்ச்சி நிலையத்தால்உருவாக்கப்பட்ட கலப்பினமான சீ.ஆர்.ஐ-60 (CRI-60) என்றதென்னைரகமே இவ்வாறு வழங் கப்பட்டுள்ளது. ஏனையமாவட்டங்களிலும், அம மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பத் தலைவிகளுக்கு இவ்வாறு தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன. நெதர்லாந்து மனித நேயச் செயற்பாடுகளுக்கான கூட்டுறவு அமைப்பின் நிதி உதவியுடனேயே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் செ.இரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.கணேசு, தென்னை அபிவிருத்திச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் ஆகியோரோடு சிக்கனக் கடன் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் மாவட்டத் தலைவர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (இ)







தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.நகரில் பிரமாண்டமான நவீன வடிவிலான கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்.பண்ணையில் அமைந்துள்ள இக்கட்டடத்தை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அமைச்சர் ரவூப் ஹக்கீம், மகளிர் விவகார பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் இணைந்து திறந்து வைத்துள்ளனர். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர், யாழ்.பிராந்திய முகாமையாளர் அலுவலகங்கள் என்பன இப்புதிய கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற இக்கட்டடத் திறப்பு விழாவில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி எமது மூலதனம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**கல்விதான் எமது மூலதனம். ஆகவே கடந்து போன சோகங்களை மனதில் ஒரு புறம் வைத்து விட்டு புதிய உத்வேகத்துடன முறையாகக் கல்வி பயின்று எதிர்காலத்தில் தலைசிறந்த கலவிமான்களாக நீங்கள் மாறவேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி அன்னை சாரதாதேவி வித்தியாலய கட்டடத்திறப்பு விழா பாடசாலை வளாகத்தில் அண்மையில் திறந்து வைக் கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இப்பாடசாலை மாணவர்கள் கிடுகினால் வேயப்பட்ட நீண்ட ஓலைக் கொட்டில்களில் கடந்த 3 ஆண்டுகளாக தமது கல்வி நடவடிக் கைகளை மேற்கொண்டுவந்த போதிலும் அவர்களின் கல்வி முன்னெடுப்புக்கள் எதுவித குறைகளுமின்றி வளர்ச்சியுற்று இன்று 350 இற்கும் மேற்பட்ட பிள்ளைகளையும் 15 ஆசிரியர்களையும் கொண்ட ஒரு பாடசாலையாகத் திகழ்ந்து வருவது பெருமைக்குரியது.

1977 மற்றும் 1983இல் நடைபெற்ற இனக்கலவரங்கள் காரணமாக மலையகப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மிகக் கூடுதலான மக்கள் கிளிநொச்சிப் பகுதியில் அமைந்துள்ள பாரதிபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம், ஆகிய பகுதிகளில் குடியமர்ந்தனர். இவர்களுடைய பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக் காகப் பாரதிபுரத்திலே பாரதி வித்தியாலயம் என்கின்ற பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. எனினும் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் அதனுடைய ஆரம்பப்பிரிவு தனியானவொரு அலகாக இயங்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு உள்ளாக்கப்பட்டது. ஆரம்பப் பிரிவைத் தனியலகாக வேறொரு இடத்தில் ஆரம்பிக் கும்படி அதிகாரிகளின் தொடரமுத் தங்கள் இருந்து வந்தன. ஆரம்பப் பிரிவுக்கான ஒரு காணியை பெற்றுக் கொள்வதில் ஏற்படக்கூடிய இராணுவக் கெடுபிடிகள் போன்ற பல சிரமங்களுக்கு மத்தியில் அக்காலத்தில் அதிபராக இருந்த இராஜேந்திரத்தின் கடுமையான முயற்சி யின் காரணமாக 5 ஏக்கர் காணியை இப்பாடசாலைக்காகப் பெற்றுக் கொண்டு அக்காணியினுள் உடனடியாகவே 100 அடி நீளம் 25 அடி அகலக் கொட்டில் ஒன்றையும் அதே போன்று 50X25 அளவிலான இன் னொரு கொட்டிலையும் அமைத்து இப்பாட சாலை பாரதி ஆரம்பப் பாடசாலை என்ற பெயருடன் ஆரம்பிக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்ட போது ஏற்கனவே பாரதி வித்தியாலயம் என்கின்ற பாடசாலை இயங் கிக் கொண்டிருந்தமையால் இப் பெயரில் ஒரு ஆரம்பப் பாடசாலையைத் தொடங்க முடி யாது எனவும் நண்பகல் 12 மணிக்குள் புதியதொரு பெயரை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டதாக அறிகின்றேன். எனினும் அதிபர் ஆசிரிய ர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக்குழு ஆகியன ஒன்றாகக் கூடி ஆராய்ந்து அன்னை சாரதா தேவி ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் இப்பாடசாலையைப் பதிவு செய்து இன்று நல்ல முறையில் இப்பாட சாலை அன்னை சாரதாதேவி வித்தியா லயம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது. இது இங்குள்ள ஆசிரியர்களினதும் அதிபரினதும் கடுமையான உழைப்பையும் ஊக்கத்தையும் எடுத் துக் காட்டுகின்றது.

நான் இப்பகுதிக்குச் சுமார் ஒரு வருடத் திற்கு முன்னர் குறைகேள் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தேன். அப்போது இப்பாடசாலை பற்றிய மிகவேதனைக்குரிய குறிப்பொன்றை இப்பாடசாலையின் அதிபர் எமக்கு வழங்கி இருந்தார். அதாவது 2006 - 2009 வரையான காலப்பகுதியில் இப்பகுதியில் சுமார் 120 பாடசாலைப் பிள்ளைகள் கொத்துக் குண்டுகள் மூலமாகவும் எறிகணைகள் மூலமாகவும் கொன்று குவிக்கப்பட்டனர் எனவும் 200 பிள்ளைகள் தாய் அல்லது தகப்பனை அல்லது இருவரையும் இழந்த மாணவர் களாகினர் எனவும் 30 பிள்ளைகளின் நிலைமை என்னவென்று இதுவரை தெரியாது என்றும் கூறியிருந்தார். இவ்வாறு கொத்துக் குண்டுகள் மூலமும் எறிகணைகள் மூலமும் எமது பிஞ்சுகள் குலை குலையாக அறுத்து நிலத்தில் வீழ்த்தப்பட்டு அவர்களின் உடல்களில் இருந்து சிந்திய இரத்தத்தினால் சிவப்பேறிய மண்ணில் தான் இன்று 150 அடி நீளத்தையும் 25 அடி அகலத்தையும் கொண்ட 6 வகுப்பறைகள், ஒரு காரியாலய அறை, ஒரு களஞ்சிய அறை என்பனவற்றைக் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதி மிக அழகாக 6.2 மில்லி யன் ரூபா செலவில் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டு இருக்கின்றது.

அன்பார்ந்த பிள்ளைகளே! கல்விதான் எமது மூலதனம். ஆகவே கடந்து போன சோகங்களை மனதில் ஒரு புறம் வைத்து விட்டு, புதிய உத்வேகத்துடன் முறையாகக் கல்வி பயின்று எதிர் காலத்தில் தலைசிறந்த கல்விமான்களாக நீங்கள் மாற வேண்டும் என்றார். (2)






வடக்கு மாகாண சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினால் சர்வதேச கணவனை இழந்த பெண்கள் தினம்–2015 ஐ முன்னிட்டு பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்குடன் 100 பயனாளிகளுக்கு 5 தென்னங்கன்றுகள் வீதம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்றபோது... (படங்கள்:–கிளிநொச்சி–1 செய்தியாளர்)

# வவுனியா அரச அதிபரை உடன் இடம் மாற்றக்கோரி சபாமண்டப கதவடைத்து உறுப்பினர்கள் போராட்டம்

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரை உடனடியாக இடம்மாற்றம்செய்வதற்கு வடக்குமாகாண சபை நடவடிக்கை எடுக்கு மாறு கோரி சபா மண்டபத்தின் கதவுகளை அடைத்து அமைச்சர்கள்,உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்ட னர். நேற்று காலை 9.30 மணிக்கு வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு ஆரம்பிக்கப்படும் போதே போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த வடக்கு மாகாண சபை அமர்விலும் அதற்கு முன்னரான அமர்விலும் சபை ஆரம்பிக்கும் முன்னர் சபா மண்டபத்தில் அனைவரும் எழுந்து நின்று வவுனியா அரசாங்க அதிபரை உடனடியாக இடம் மாற்றுமாறு கோரி போராட்டம் நடத்தினர். ஆனால் வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலநதாலோசித்து இதற்கான தீர்வை பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்திருந்தார்.

உறுதியளித்தமைக்கு இணங்க குறித்த பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்கும், வடக்கு மாகாண முதல் அமைச்சர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆகியோருக்கு அவைத் தலைவரினால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டபோதும் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக் கப்படவில்லை.

### அமைச்சர்களும் பங்கேற்பு



வவுனியா மாவட்ட அரச அதிபரின் செயற்பாடு, சிறப்புரிமை மீறல் மற்றும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை அவமதித்த செயலாகும் என்பதால் உடனடியாக இதற்குரிய தீர்வை பெற்றுத் தருமாறு வலியுறுத்தி உறுப்பினர்கள், அமைச்சர்கள் நேற்றைய தினம் கதவடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண அமைச்சர்கள், அவைத்தலைவர் ஆகியோர் கூட்டமொன்றினை கூடி இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு மீண்டும் அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைப்பதாக முடிவெடுக்கப்பட்டது. இதனை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் குறித்த பிரச்சினை தொடர்பில் மீண்டும் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி தீர்வை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையை எடுப்பதாகவும் உறுதியளித்தார். எனினும் அதனை ஏற்காத வடமாகாண சபை உறுப்பினர்கள் 11 மணிவரை வடக்கு மாகாண சபையை ஒத்திவைத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ந்தும் உறுப்பினர்களின் சபா மண்டப கதவடைப்பில் ஈடுபட்டு மண்டபத்தின் வாயில் பகுதி முன்பாக ஒருசில உறுப்பி னரகள் மல்லாக்காக படுத்திருந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சபைக் குள்ளே செங்கோல் கொண்டு போக முடியாத நிலை காணப் பட்டதனால் சபையினை நடத்த முடியாத நிலையும் காணப் பட்டது.

பின்பு உறுப்பினர்களுடன் பேச்சுவார் த்தை நடத்திய அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் சபையினை ஆரம் பிக்காமல் விட்டால் சில சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

ஆகையினால் சபையினை ஆரம்பித்து வைத்து விட்டு பின்பு ஒத்திவைப்பது நல்லது என உறுப்பினர்களிடம் தெரிவித்தார். இதனையடுத்து சபையினை ஆரம்பிப்பதற்கு இடம் கொடுத்த உறுப்பினர்கள் வாயிலில் இருந்து விலகிச் சென்று சபைக்குள்ளே சென்றனர். பின்பு நண்பகல் 12 மணியளவில் ஆரம்பித்த கூட்டம் உறுப்பினர்களின் விவாதங்களுடன் சபை எதிர்வரும் ஜூலை மாதம் 23 ஆம் திகதி வரை அவைத் தலைவரினால் ஒத்திவைக்கப்பட்டது. (2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் ஒருவர் கைதாகி விளக்கமறியலில் வைப்பு

யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதிமீது தாக்குதல் மேற்கொண்டார் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.


கடந்த மேமாதம் 20ஆம் திகதி நீதிமன்ற கட்டடத் தொகுதி மற்றும் வளாகத்தில் நின்றிருந்த வாகனங்களை அடித்துச் சேதமாக்கியமை தொடர்பாக வீடியோ புகைப்பட ஆதாரங்களை திரட்டி கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

அந்தவகையில் சுன்னாகம் உடுவிலைச் சேர்ந்த மாணவன் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டார்.

இதன்போதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். (இ-9)

## பேசும் படம்-69

இடம்: தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி



முதுமை பாரமல்ல வேதம் / முத்திப் பழுத்த செத்தலாயினும் உள்ளிருப்பது இளநீர் அல்லவா?

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம், வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
வி.விபுலானந்
யாழ்ப்பாணம்

## பொது அறிவித்தல்

இல.134, ஜெயந்தி நகர், கிளிநொச்சி, இலங்கை எனும் முகவரியிலுள்ள கே.கே.கே. அப்பரல்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் (KKK Apparels (pvt) Ltd) சில இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் என்பன லான்ட் ஓ'லேக்ஸ் (Land O'Lakes) நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் VEGA/BIZ+ வியாபார அபிவிருத்தித் திட்டத்தின் வெளிப்படையான எழுத்து மூலமான சம்மதமின்றி விற்கப்படவோ அல்லது உரிமை மாற்றம் செய்யப்படவோ முடியாதென, பொது மக்களும் மற்றும் ஆடை உற்பத்தி கைத்தொழில் பிரதிநிதிகளும் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். ஒரு அரச- தனியார் பங்குடமையின் பகுதியாக, ஓர் எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் கீழ், அதன் ஆடை உற்பத்தி வசதிகளை விரிவுபடுத்துவதற்கு கே.கே.கே. அப்பரல்ஸிற்கு பொருட்களாக நன்கொடையளிக்கப்பட்ட, இனங்காணப்படக் கூடிய மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட சொத்துக்கள், 33 சிங்கர் கைத்தொழில் தையல் இயந்திரங்கள், ஒரு சிங்கர் அலங்காரத் தையல் (Embroidery) இயந்திரம், 14 துணை உதவி இயந்திரங்கள், ஒரு கேர்லோஸ்கர் 62.5 கி. வோ மின்பிறப்பாக்கி (Kirloskar 62.5 KV), ஒரு டிமோ டாடா லொறி, மற்றும் ஒரு லங்கா அசோக் லேலான்ட் போக்குவரத்துப் பேரூந்து என்பவற்றை உள்ளடக்குகின்றன. அத்தகைய அனைத்து சொத்துக்களும் சர்வதேச நன்கொடை நிதிகளால் நிதியளிக்கப்பட்டவை என்பதுடன் கிளிநொச்சி சமூகத்திலுள்ள 100க்கும் மேற்பட்ட தனிப்பட்டவர்களுக்காக அர்த்தமுள்ள வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு மட்டும் உபயோகிக்கப்பட வேண்டிய பொதுப் பொருட்களாக கவனத்தில் கொள்ளப்படும். நன்கொடையாக அளிக்கப்பட்ட அனைத்து பொருட்களும் வற் (VAT Free) வரியின்றி இலவசமாக கொள்வனவு செய்யப்பட்டவை என்பதற்கான விசேட கவனம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். விற்பனை, உரிமை மாற்றம், அல்லது சொத்துக்களின் கொள்வனவு இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கணிசமான வரிக் கடப்பாட்டை ஏற்படுத்தலாம். இந்த அறிவித்தல் பற்றிய மேலதிக விசாரணைகளுக்கு 011-7391890 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

**இல. 134, ஜெயந்தி நகர்,**
**கிளிநொச்சி, இலங்கை.**

(சி-1357)

# மகிந்தவின் தேர்தல் பிரசாரத்திற்காக பசிலால் ஆயிரம் லட்சம் ரூபா செலவு

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ 1050 இலட்சம் ரூபாய் நிதியினை மகிந்தவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு செலவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷ இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் நிதியில் இருந்து 1050 இலட்சம் ரூபாய் பணத்தை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வழங்கியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பிற்கு வெளிப்படுத்தல் என பெயரிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆசிரிய கலாசாலையில் மீள்பரீட்சை

ஆசிரிய கலாசாலைகளுக்காக இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடத்தும் மீள் பரீட்சை எதிர்வரும் 06 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 11 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியகலாசாலையின் ஊடாக மீள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கலாசாலைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவற்றைக் கலாசாலை அலுவலக நேரத்தில்பெற்றுக் கொள்ளலாம் என்றும் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

இதேநேரம் நடைபெறவுள்ளபரீட்சை தொடர்பான நேரசூசி கலாசாலையின் விளம்பரப்பலகையில் இடப்பட்டுள்ளது. விபரங்கள் தேவைப்படுவோர் தமக்குரிய பாடங்களைக் குறிப்பிட்டு கலாசாலையின் தொலைபேசி இலக்கமாகிய 021 2230323 ஊடாகப்பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)





மண்டைதீவு பூமாவடி பூம்புகார் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய மகா குடமுழுக்கு அண்மையில் இடம்பெற்றது. மஹா குடமுழுக்கை ஆலய பிரதம குரு சபா விஜயகுமார் நடத்தி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றைக்காடாக காட்சியளிக்கும் மகிழங்குளம் இந்துமயானம்

## உடல்களை தகனம் செய்ய வருவோர் பெரும் அவதி



(குருமன்காடு)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானம் பற் றைக் காடாக காட்சியளிக்கின்றது இதனால் இறுதிக் கிரியை செய்வதற்கு வரும் பொது மக்கள் பெரும் சிரமங்களை நோக்குவதாக தெரிவிக்கப்டுகின்றது பல கிராமங்களுக்கு பொதுவாக காணப்படும் இம்மயானம் பல காலமாக புனரமைக்கப்படாதுள்ளது என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மயானம் அடர்ந்த காட்டு பகுதி போன்று காட்சியளிக்கிறது. மழை காலங்களில் மயா னம் சேறும்சகதியுமாக காணப்படுவதுடன் கிணறு புல் செடிகளால் மூடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

இதனால் மயானத்தில் இறுதிச் சடங்குகளை மேற்கொள்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் கட்டணம செலுத்தியே தகனக்கிரியைகள் மேற்கொள்கின்ற போதும் மயானம் தூய்மை அற்ற நிலையிலே காணப்படுகினறது. எனவே உரிய அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் மயானத்தை தூய்மைபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2)

# பருவக்காற்றினால் கடற்றொழில் பாதிப்பு மீனவர்கள் கவலை

மன்னார் மாவட்டத்தில் தற்போது கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருவதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரையோரப்பகுதிகளில் கடந்த மே மாதம் முதல் பருவக்காற்று மிக வேகமாக வீசி வருகின்றமையினால் மீனவர்களின் கடற் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படடுள்ளது.

இதனால் நாளாந்தம் மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறித்த பருவக்காற்றை மீனவர்கள் "சோளக்காற்று" எனக் கூறுகின்றனர். இந்த பருவக்காற்று மே மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையிலான சுமார் 06 மாதங்கள் வரை கடல் சார் கரையோரப்பிரதேசங்களில் வீசும். இதனால் குறித்த 06 மாத காலங்களிலும் மீனவர்கள் கடற்றொழில நடவடிக்கைகள் பாதிப்படையும்.

இதனால் ஆழ்கடலு க்குச் செல்வதை குறைத்து கரைவலை தொழிலை மீனவர்கள் மேற்கொண்டு வருகின்றமை குறப்பிடத்தக்கது. (2)

# வர்த்தகர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வர்த்தகசங்கம் அமைக்குக

## கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் 390 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் இருக்கின்ற நிலையில் வர்த்தக சங்கம் ஒன்று இல்லாமையினால் வர்த்தகருடைய பிரச்சினை தொடர்பாகவும் செயற்பாடுகள் குறித்தும் எவரும் கவனம் எடுக்காத நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த் காலங்களில் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கான வர்த்தக சங்கம் தெரிவு செய்யப்பட்டு இயங்கி வந்தது.


இச் சங்கத்தின் செயற்பாடுகள் நீண்டகாலமாக முடங்கிய நிலையில் காணப்படுவதாக வர்த்தகர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

2013.02.15 ஆம் திகதி அம்பாள் குளத்தில் இயங்கிய பொதுச் சந்தையான மீன் கடைத்தொகுதி, மரக்கறிக்கடைத் தொகுதி இவை இரண்டும் நிரந்தர கட்டடங்களாக கட்டப்பட்டு மீது ஏனைய கடைகள் அனைத்தும் தற்காலிகமாக தகரங்களால் கட்டப்பட்டுள்ளது. ஆறு மாதங்களுக்குள் ஏனையவருக்கு நிரந்தர கட்டடம் அமைத்து தருவதாக வாக்குறுதி வழங்கி வியாபார நிலையங்களை வியாபாரிகளுக்கு வழங்கினார்கள்.

இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் கட்டடங்கள் அமைப்பதற்கு இதுவரை அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன் இடப்பெயர்வுக்கு முன்னரான காலப்பகுதியில் வர்த்தகர்களின் நலன் கருதி ஞாயிற்றுக்கிழமைகளில் புடைவைக்கடை இரண்டு, வெற்றிலை வாணிபம் இரண்டு, அழகு சாதனம் இரண்டு, பல்பொருள் இரண்டு சுழற்சி முறைப்படி திறந்து வியாபாரம் செய்து வந்தனர். இதனை சில பகுதியினர் மட்டும் செய்து வருவதாகவும் புடைவை, அழகு சாதன கடைகளில் முறையே இவற்றைப் பின்பற்றாமல் உள்ளதாகவும் நிரந்தர கடைத்தொகுதிகளை அமைத்து தருவதற்கு அதிகாரிகளிடம் சென்று கதைப்பதற்கும் இது போன்ற பல பிரச்சினைகளை முன்னெடுத்து செல்வதற்காகவும் வர்த்தகர்களுடைய நலனில் அக்கறை கொண்டு ஓர் வர்த்தக சங்கம் அமைக்கப்பட வேண்டும் என வர்த்தகர்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-271)




# மக்கள் கலந்துகொண்டு பயனடைந்த குறைநிவர்த்தி நடமாடும் சேவை



(குருமன்காடு)

வடக்கு மாகாணசபையும் முல்லைத்தீவு மாவ ட்ட செயலகமும் இணைந்து கடந்த 18ஆம் திகதி நடத்திய குறைநிவர்த்தி நடமாடும் சேவை மு/பாலிநகர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலா நிதி சி.சிவமோகன், வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடக்கு மாகாணசபை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை விவசாய அமைச்சர்பொ.ஐங்கரநேசன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோ, மன்னார்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் பெருந்திரளான பொது மக்கள் கலந்து கொண்டு தங்களுக்குரிய காணி, மருத்துவம், விவசாயம, கல்வி தொடர்பான சேவைகளை இலகுவில் பெற்றுக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-250)

# தொழில்நுட்ப ஆய்வு கூடம் திறப்பு

கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வவுனியா வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலய தொழில்நுட்ப ஆய்வு கூடம் வன்னி மாவட்ட நாடாளுமனற உறுப்பினர் ந. சிவசக்தி ஆனந்தனினால அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

அறிவு மைய அபிவிருத்தியை உறுதி செய்து கொள்வதற்காக ஆயிரம் இடை நிலைப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இவ் ஆய்வு கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் தே.சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜ், மாகாண கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார், வலயக்கல்வி பணிப்பாளர் செ.அன்ரன் சோமராஜா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (2)



கிளிநொச்சியில் ஆச்சிரமம் அமைத்து ஆன்மீகத்தை மேம்படுத்திய மகாதேவ ஆச்சிரம முதலாவது பீடாதிபதியான தவத்திரு ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் 25ஆவது குருபூசையும் அவரின் முதலாவது சீடரும் இவ்வாச்சிரமத்தின் இரண்டாவது பீடாதிபதியுமான தவத்திரு ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் 25 ஆவது ஆண்டு பீடாரோகண பூர்த்தி சிறப்பு நிகழ்வு கடந்த 18ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றபோது... (படங்கள்:-சிவநகர் செய்தியாளர், கிளிநொச்சி-1 செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1173

# கடவுள் கண்ட கனவு



'நான் கிளம்பறேம்மா....' ஆட்டோ சத்தம் கேட்குது என்று மகள் சொன்னதும், 'போயிட்டு வாடி செல்லம். லஞ்ச் எடுத்துக்கிட்டியா?' என்று கேட்டார் அம்மா.

'ம்' என்றவாறு புத்தகப்பையுடன்படி இறங்கினாள் மீனா.

ஆட்டோ டிரைவர் புத்தகப் பையை வாங்கிக் கொண்டார். இரண்டு குழந்தைகளுக்குப் பக்கத்தில் மூன்றாவது குழந்தையாய் உட்கார்ந்து கொண்டாள் மீனா.

'எல்லோரும்கை, காலை உள்ளே வெச்சாச்சா? ஸ்டார்ட் பண்ணலாமா?'

'பண்ணலாம் அங்கிள்!'

பள்ளியில்... இரண்டாவது பாடவேளையில் மிஸ் கேட்ட கேள்விக்கு மீனாவால் பதில் சொல்ல முடியவில்லை.

'மீனா, நேத்திக்கு சரியாய்ப் படிக்கலை. என்ன காரணம்னு நான் சொல்லவா? மிஸ் கேட்டதும் மீனா திருதிருவென விழித்தாள்.

'எல்லோரும் எழுந்து, மீனாவுக்கு ஹேப்பி பர்த்டே பாடுங்க' என்று மிஸ் சொன்னதும் எல்லோரும் ஹேப்பி பர்த்டே பாடினர். மிஸ் தன்னிடம் இருந்த சாக்லேட் பாக்கெட்டை பிரித்து முதலில் மீனாவுக்கும் பிறகு மற்ற குழந்தைகளுக்கும் கொடுத்தார்.

'உங்களுக்கு எப்படித் தெரியும் மிஸ்?' ஆச்சரியத்துடன் கேட்டாள் மீனா. 'உங்கள் எல்லோருடைய பர்த்டே லிஸ்ட்டும் என்கிட்டே இருக்கு. நேத்திக்கு சண்டே. அதனால் மீனாவோட பர்த்டேயை நாம இன்னிக்கி கொண்டாடறோம்.

மீனா நேத்து முழுக்க ஜாலியா இருந்த தாலே சரியாப் படிக்கலை. அதனால நாளைக்கு மீனா தரோவா படிச்சுட்டு வந்துடுவா. இப்போ பாடத்துக்கு போவோம். சரியா மீனா?'

"ஓ.கே. மிஸ்!"

லஞ்சுக்கு அடுத்த வகுப்பில் மீனா எழுந்து, மிஸ் ஒன் பாத்ரும் போகணும் என்று கேட்டதும் ஆசிரியர் திரும்பிப் பார்த்தார்.

'சரி, ஓடாம ஜாக்கிரதையா போ. இன்னிக்கு ஆயா வரலை' என்றதும் தலையை ஆட்டியவாறு மீனா சென்றாள்.

திடுக்கிட்டு விழித்த கடவுள் கண்களை கசக்கியபடி எழுந்து உட்கார்ந்தார்.

'பிரபு இன்று ஏன் இத்தனை நேரம் உறங்கிவிட்டீர்கள்?' என்று கேட்டார் தேவியார்.

'தேவி, மிக நல்ல கனவு ஒன்றைக் கண்டேன். அது தந்த ஆனந்தத்தில் ஆழ்ந்து உறங்கிவிட்டேன். உடனே நான் பூவுலகத்துக்குச் சென்று உண்மை நிலை கண்டறியவேண்டும்' என்றவர் அடுத்த நொடி பூமியை நோக்கிப் பயணித்தார். சிறுமி மீனாவைத் தேடிக் கண்டுபிடித்தார்.

'சனியனே, ஏண்டி ஒழுங்காச் சாப்பிடாம அப்படியே வெச்சிருக்கே?' மீனாவின் தலையில் அவள் அம்மா குட்டினார். வலி பொறுக்காத மீனாவின் கண்களில் கண்ணீர் கசிந்தது. சட்டையில் கண்களைத் துடைத்துக் கொண்டாள். பளார் என்று முதுகில் அடி விழுந்தது. 'வெள்ளைச் சட்டையில் துடைக்காதேன்னு எத்தனை தடவை சொல்லி இருக்கேன். இதே இட்லிதான் இன்னிக்கு உனக்கு லஞ்ச். மத்தியானம் சாப்பிடலைன்னா ராத்திரிக்கும் இதையே திங்கச் சொல்வேன். ஆட்டோக்காரன் ஹார்ன் அடிக்கிறான். கிளம்பு.... ஸ்கூல்லே பாக்கியை அழுதுக்கோ' என்று விரட்டினார்.

ஒரு கையில் புத்தகப்பை, இன்னொரு கையில் உணவுப் பையைத் தூக்கி, ஷூவில் அரைகுறையாய்க் கால் நுழைத்து, நொண்டியபடியே நடந்தாள் மீனா. ஆட்டோக்காரனின் இடைவிடாத ஹார்ன் ஒலி மீனாவைக் கண்டதும் நின்றது.

'ஏய்... ஏழரை மணிக்கு வாசலுக்கு வெளியே நிக்கணும்னு சொல்லி இருக்கேனில்லே' மீனா பாதி ஏறும் போதே ஆட்டோ உறுமி கிளம்பியது.

பள்ளியில் முதல் பாடவேளையில் ஆசிரியை கேட்டார்: 'ஹோம் வொர்க் ஏன் இன்கம்ப்ளீட்டா இருக்கு?'

'நேத்து எனக்கு ஹேப்பி பர்த்டே மிஸ், அதனாலே...'

'அதனாலே எட்டு மணி நேரம் கேக் வெட்டினியா? நாளைக்கு வரும் போது மூணு தடவை இம்போசிஷன் எழுதிக்கிட்டு வரணும்' என்று சிடுசிடுத்தார்.

அடுத்த பாடவேளையில் சோஷியல் மாஸ்டரிடம் ஒரு விரலைத் தூக்கி பெர் மிஷன் கேட்டாள் மீனா. 'எத்தனை தடவை தான்போவே? இதுவே கடைசி. மறுபடியும் கேட்டால் உதைப்பேன்' என்றார்.

பாத்ரூமை நோக்கி ஓடினாள் மீனா. பார்த்துக்கொண்டு இருந்த கடவுள், கண்களைத் துடைத்துக் கொண்டார்.

அன்று இரவு அப்பா அலுவலகத்திலிருந்து வீடு திரும்பினார். 'மீனா எங்கே நித்யா?' என்று கேட்டார்.

'ஹோம் வொர்க் பண்றாள்னு நினைக்கிறேன்'

அப்பா, மீனாவின் அறைக்குள் எட்டிப் பார்த்தார். உள்ளேயிருந்து மென்மை ன அந்தக் குரல்... 'ஏன் பேச மாட்டேங்கறே என்மேல் கோபமா? நான்தான் அஞ்சே நிமிசத்துலே உனக்குப் புது டிரஸ் ரெடியாயிடும்னு சொல்றேன் இல்லே?' எதிரிலிருந்த டெடிபியரிடம் மீனா பேசிக் கொண்டு இருந்தாள்.

'கொஞ்ச நேரத்திலே புது டிரஸ் போட்டுகிட்டு நாம கேக் சாப்பிடலாம். இப்போ சமத்தா உட்கார்ந்து இரு. அஞ்சே நிமிஷத்துலே உனக்கு டிஸ்கோ டிரஸ் ரெடி பண்ணிடறேன்' மடார் என்று கதவு திறந்தது. கனல் தெறிக்கும் கண்களுடன் மீனாவின் அப்பா 'என்ன பண்ற' என்று கேட்டார். 'டெடிக்கு ஹேப்பி பர்த்டே அது தான் புது டிரஸ் போட்டுக் கேக் வெட்டி...'

'உன் டெடியை ஒழிச்சுக் கட்டினால்தான் நீ உருப்படுவே' என்ற அப்பா டெடியைத் தூக்கி பரணில் வீசி எறிந்தார். 'மரியாதையா ஹோம் வொர்க்கை முடி. இல்லேன்னா அடுத்த பேரன்ட்ஸ் டீச்சர்ஸ் மீட்டிங்குக்கு வரமாட்டேன்' என்று கதவை அடித்துச் சாத்தி வெளியேறினார் அப்பா.

அன்று இரவு மீனாவின் கனவில் கடவுள் தோன்றி அவளை அள்ளி அணைத்தார். 'அழுகையை நிறுத்து. உனக்கு என்ன பிடிக்கும்?' அவள் கண்களை துடைத்தபடி கேட்டார். 'எனக்கு எல்லாம் பிடிக்கும் எல்லோரையும் பிடிக்கும். ஆனா இந்த உலகத்துலேயே டெடிக்கு மட்டும்தான் என்னைப் பிடிக்கும். அதனாலே... எனக்கு டெடி வேணும்' என்றாள் மீனா.

'அவ்வளவுதானே' என்ற கடவுள் தும்மினார். அப்போது தோன்றிய பெரும் காற்றில் கதவு படார் என்று அடித்துக்கொண்டது. மேலே இருந்த டெடி பொம்மை கீழே மீனாவின் மேல் விழுந்தது. பெரும் மகிழ்ச்சி அடைந்த மீனா அதைக் கட்டிப்பிடித்தபடி தூங்கிப் போனாள்.

06.2015
24

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1340 - நூறாண்டுகள் போர்: மூன்றாம் எட்வேர்ட் தலைமையின் கீழ் இங்கிலாந்து கடற்படையினர் பிரெஞ்சுக் படைகளை முற்றாகத் தோற்கடித்தனர்.
- 1509 - எட்டாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1571 - மணிலா நகரம் அமைக்கப்பட்டது.
- 1662 - மக்காவு நாட்டைக் கைப்பற்றும் முயற்சியில் டச்சு நாட்டவர் தோல்வி கண்டனர்.
- 1664 - நியூஜேர்சியில் குடியேற்றம் ஆரம்பமானது.
- 1849 - அமெரிக்கப் பெண்மணியான எலிசபெத் பிளாக்வெல் என்பவரே அமெரிக்காவில் முதன முதலாக மருத்துவப் பட்டம் பெற்ற பெண்மணியாவார். அவர் இப்பட்டத்தினை 1849 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார்.
- 1860 - புளோரன்ஸ் நைட்டிங்கேலின் எண்ணக் கருக்களுக்கமைய முதலாவது தாதிகள் பயிற்சி நிலையம் இங்கிலாந்தில் அமைக்கப் பட்டது.
- 1894 - பிரெஞ்சு அரசுத் தலைவர் மரீ பிரான்சுவா சாடி கார்னோ படுகொலை செய்யப்பட்டார்.
- 1932 - சியாமில் (தாய்லாந்து) இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து மன்னரின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைந்தன.
- 1938 - 450 மெட்ரிக் தொன் எடையுள்ள விண்கல் பென்சில்வேனியாவின் சிக்கோராவில் வீழ்ந்தது.
- 1940 - பிரான்சும் இத்தாலியும் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியரை வெற்றி கொண்ட சோவியத் படைகளின் வெற்றி அணிவகுப்பு மொஸ்கோவில் இடம் பெற்றது.
- 1948 - சோவியத் ஒன்றியம் ஜேர்மனியின் தமது கட்டுப்பாட்டிலுள்ள பெர்லினின் மேற்குப் பகுதியுடன் அமெரிக்க, பிரித்தானிய, பிரெஞ்சுக்கள வசம் இருந்த பகுதிகளுடனான தரைவழித் தொடர்புகளைத் துண்டித்தது.
- 1981 - 17 ஆண்டுகளாக உலகின் மிக நீளமான தொங்கு பாலமாக இருந்த ஹம்பர் பாலம் இங்கி லாந்தில் அமைக்கப்பட்டது.
- 1983 - அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீராங்கனை சாலி ரைட் தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு பூமி திரும்பினார்.
- 2004 - நியூயோர்க்கில் மரண தண்டனை சட்டபூர்வமற்றதாக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1883 - விக்டர் ஹெஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1964)
- 1907 - கா. அப்பாத்துரை, தமிழறிஞர் (இ. 1989)
- 1915 - ஃபிரெட் ஹாயில், அண்டவெளி உயிர் மூலவிகளை ஆராய்ந்த வானியல் அறிவியலாளர் (இ. 2001)
- 1921 - கண்ணதாசன், தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர் (இ. 1981)
- 1928 - எம். எஸ். விஸ்வநாதன், தென்னிந்திய இசையமைப்பாளர்
- 1938 - நீல. பத்மநாபன், எழுத்தாளர்

### இறப்புகள்

- 1908 - குரோவர் கிளீவ்லாண்ட், ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் (பி. 1837)
- 2006 - சிட்டி பெ. கோ. சுந்தரராஜன், மணிக்கொடி எழுத்தாளர், திரைப்பட விமர்சகர் (பி. 1910)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு




...2 மகள்கள்

ரஜினி - லதா தம்பதிகளுக்கு, மூத்த மகள் ஐஸ்வர்யா 1982 ஜனவரி 1 ஆம் பிறந்தார். இரண்டாவது மகள் சவுந்தர்யா 20-9-1985 இல் பிறந்தார்.

ஐஸ்வர்யா, 'கார்பரேட் லா' படித்தவர். சவுந்தர்யா, 'மல்டி மீடியா கிராபிக்ஸ்' படித்தவர்.

திருமணம்

ஐஸ்வர்யாவுக்கும், நடிகர் தனுசுக்கும் 2004 நவம்பர் 18 ஆம் திகதி திருமணம் நடைபெற்றது. இது, பெற்றோர்கள் சம்மதத்துடன் நடந்த காதல் திருமணம்.

ரஜினியின் ஆசான் கே.பாலசந்தர், தாலியை எடுத்துக்கொடுக்க, அதை தனுஷ் வாங்கி மணமகள் கழுத்தில் கட்டினார்.

திருமணத்துக்கு அன்றைய முதல்-அமைச்சர் ஜெயலலிதா வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்.

திருமண வரவேற்புக்கு தி.மு.கத தலைவர் கலைஞர் கருணாநிதி வந்து வாழ்த்தினார்.

மற்றும் மத்திய மந்திரிகள் தயாநிதிமாறன், ராஜா, அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன், ஆந்திர முன்னாள் முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு, நடிகர்கள் கமலஹாசன், சிவகுமார், விஜய், விக்ரம், 'ஜெயம்' ரவி, நடிகைகள் குஷ்பு, மனோரமா, பட அதிபர்கள் ஏவி.எம். சரவணன், ஆர்.பி.சவுத்ரி, கேயார, ராமா நாயுடு உள்பட பிரமுகர்கள், கலை உலகத்தினர் பெருந்திரளாக வந்து வாழ்த்தினர்.

பேரன்

ஐஸ்வர்யா - தனுஷ் தம்பதிகளுக்கு குழந்தை உள்ளன. பெயர் 'யாத்ரா.'

பேரன் யாத்ரா மீது ரஜினிக்கு கொள்ளைப் பிரியம். படப்பிடிப்பு இல்லாத நேரங்களில், பேரனை மடியில் தூக்கி வைத்து கொஞ்சுவதிலேயே அதிக நேரம் செலவிடுகிறார்.

பத்மபூஷண்

தமிழக அரசின் 'கலைமாமணி' விருதைப் பெற்ற ரஜினிகாந்த், மத்திய அரசின் 'பத்மபூஷண' விருதையும் பெற்றுள்ளார்.

2000 ஆவது ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி நடைபெற்ற விழாவில், ரஜினிக்கு இந்த விருதை அன்றைய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் வழங்கினார்.

ரஜினியின் ஆசை

ரஜினியை வைத்துப் படம் எடுக்க வேண்டும் என்ற ஆசை எல்லா பட அதிபர்களுக்கும் உண்டு. ரஜினிக்கு கலைஞர் கருணாநிதி கதை - வசனத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. அது இன்றுவரை நிறைவேறவில்லை.

வீடு

ரஜினியின் வீடு, போயஸ் தோட்டத்தில் உள்ளது. வீட்டின் பெயர் 'பிருந்தாவனம்.'

இந்த வீட்டின் முகப்பில் 'வாய்மையே வெல்லும', 'சத்யமேவஜெயதே' என்ற வாசகங்கள் முன்பு இருந்தன. இப்போது, 'வாழ்க வளமுடன்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.


ரஜினியின் அறைக்கு யார சென்றாலும் (மனைவியே ஆனாலும்) கதவைத்தட்டி அவர் 'கம் இன்' என்று குரல் கொடுத்த பிறகே உள்ளே நுழையவேண்டும்.

வீட்டுக்கு வருபவர்களை ஜில்லென்ற வெந்தய மோர் கொடுத்து உபசரிக்கிறார். வெந்தயத்தை ஊற வைத்து, முளை கட்டி, காய வைத்து பொடி செய்து, இளம் மோரில் கலந்து குடிப்பது ரஜினிக்குப் பிடிக்கும்.

முதல் கார்

ரஜினி, தான் முதன் முதலாக வாங்கிய காரை இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறார். முன்பெல்லாம் ரஜினியே காரை ஓட்டிச்செல்வது வழக்கம். இப்போது டிரைவர் ஓட்டுகிறார்.

(தொடரும்..)



# கருவாச்சி காவியம்

வைரமுத்து-171

அய்யா அழகுசிங்கம்! எம் புருசன் மகனே! நல்ல கோளாறு நாலு சொல்றேன் கேளப்பா. கருவாச்சி ஒன்னியப் பெத்தெடுத்தவப்பா. நான் ஒன்னியத் தத்தெடுத்தவப்பா.

கோட்டையில கொடிகட்டி ஆளப் பெறந்த மகராசன் நீயி; குண்டித்துணிக்கு அலையலாமா...? அப்படி ஒன்னிய அனாதிக்காட்ல விட்ருவனா...? விட்டுர மாட்டேன். நீ இருக்க வேண்டிய ஊரு சுண்டெலிக்குக்கூட சோளக்கருது இல்லாத இந்தச் சொக்கத்தேவன்பட்டியா? கெழக்குச் சீமைக்குப் போ.

குப்பணம்பட்டியில ஒம் மாமன் வீட்டுல- அதான்டா மகனே என் அண்ணன் வீட்ல- போயி இரு. அப்பறம் பாரு ஒம் பொழப்ப. பருத்தி வேட்டியாக் காய்க்கும். பாறாங்கல்லு பூவாப்பூக்கும்.

எள்ளுருண்டைய ஊட்டி விட்டுக்கிட்டேயிருந்தவ செத்த வடம் அவன் வாயில வச்ச வெரல வெளிய எடுக்கல. அவ வச்ச காரியம் பலிச்சிருச்சு; கறிச்சுன்னு கடிச்சுப் புட்டான் பய.

அவ விசுக்குன்னு வெரல எடுத்து ஒதறயாத்தேன்னு அவன் பதறிப் போனான்.

ஒண்ணும் ஆகாதுடா மகனே. நீ கடிச்சாலும் வலிக்காது; அடிச்சாலும் ஒறைக்காது ஆத்தாளுக்கு.

நான் போகச் சொல்ற எடத்துக்குப் போவியா?

எங்க போகச் சொன்னாலும் போவேன்னான் இன்னொரு உருண்டைய முழுங்கிக்கிட்டே.

அவனுக்கு ஊட்டிவிட்டே உசுர வாங்குறா; எள்ளுருண்டைக்குள்ளயே பொதைக்கிறா.

கைகால் வெளங்காமக் கட்டில்லயே கெடக்குறான் எங்க அண்ணன்; அதான் ஒன் மாமன். எங்க மதினி பாவம் ஒரு அரைக் கிறுக்கி. கஞ்சிகாச்சி ஊத்தவே பெறந்தவ. அடுப்பாங்கரையில சமைஞ்சு கரிச்சட்டிக்கு வாக்கப்பட்டவ. அவளுக்கு ஒரே ஒரு மக இருக்கா மகனே. பேரு பட்டுக்குஞ்சம். அவ வயசுல நானு அவ மாதிரி இருந்தேன். என் வயசுல அவ என்னிய மாதிரி இருப்பா. செந்துருக்கம் வச்ச



செவ்வந்திப்பூவு அவ. மொறைன்னு பாத்தா ஒனக்கு மொறப்பொண்ணு மாதிரி தான். ஒத்த மாட்டு வண்டி ஒண்ணு வச்சிருக்கான் ஒம் மாமன். பட்டிதொட்டியெல்லாம் போ. பருத்தி, கடல, தக்காளி, கெழங்கு வாங்கு. சந்தை பெருத்த தேசமடா மகனே கெழக்குச்சீமை. திங்கக்கிழமை தும்மக்குண்டுச் சந்தை- செவ்வாய்க்கிழமை பெருங்காம நல்லூர்ச் சந்தை- புதங்கிழமை உசிலம்பட்டிச் சந்தை- வியாழக்கிழமை வாலாந்தூர்ச் சந்தை- வெள்ளிக்கிழமை விக்கிரமங்கலம் சந்தை- அஞ்சுநாள் சந்தையிலயே அள்ளிக்குமிச்சுப்புடு காசை. வாலாந்துர்ச் சீமைக்கு வலதுகால எடுத்து எட்டு வையி. இந்தா! என் காணிக்கைா இந்தத் துட்ட வையி. நூறு வெள்ளிக்காசை அவுத்து அவன் கையில கல கல கலன்னு கொட்டவும் பொல பொலபொலன்னு அழுது பூரிச்சுப் போனான் பய.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச போதைப்பாவனை கடத்தலுக்கு எதிரான தினம்

## வடக்கில் நடைபவனி நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு

எதிர்வரும் வெள்ளிக்கிழமை யன்று சர்வதேச போதைப்பாவனை மற்றும் சட்டவிரோதக் கடத்தல் என்பவற்றிற்கு எதிரான தினம் கடைப்பிடிக்கப்படுவதையொட்டி அது தொடர்பாக கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் விழிப்புணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச போதைப் பாவனை மற்றும் சட்டவிரோதக் கடத்தல் என்பவற்றிற்கு எதிரான தினத்தினை வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தும் முகமாக, அன்றைய தினம் பாடசாலைகள் தோறும் நடைபெறுகின்ற காலைக் கூட்டத்தில் காலை 8 மணி தொடக்கம் 8.20 மணி வரை சர்வதேச போதைப்பாவனை மற்றும் சட்ட விரோதக் கடத்தல், முகநூல் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், மதுபாவனை, புகையிலைப் பாவனை, தெருவிபத்து, மாணவர் சரீரதண்டனை, வீண்வார்த்தைப் பிரயோகம் தொடர்பான சொற்பொழிவொன்றினை பொருத்தமான ஆளணி வளத்தினைக் கொண்டு மேற்கொள்வதுடன்,

இது தொடர்பாக காலை 8.20 தொடக்கம் 10 மணிவரை நடைபெறவுள்ள நடைபவனிக்குரிய சுலோகங்களை தயாரிக்கும் போது அச்சுலோகங்கள் தனிநபரையோ, அரசாங்கத்தையோ மற்றும் வேறு நிறுவனங்களையோ பாதிக்காத வகையில் தயாரித்தல் வேண்டும். மேலும் இது தொடர்பான சகல விடயங்களும் சகல வலயப் பாடசாலை அதபர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சுலோகங்கள் கீழ்வரும் விடயங்களைப் பிரதிபலிப்பனவாக அமைதல் வேண்டும்.

போதைப் பாவனை, சட்ட விரோதக் கடத்தல்,முகநூல் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், மதுப் பாவனை, புகையிலைப் பாவனை, தெருவிபத்து, மாணவர் சரீர தண்டனை,வீண்வார்த்தைப் பிரயோகம

அடுத்து, சர்வதேச போதைப் பாவனை மற்றும் சட்ட விரோதக் கடத்தல் என்பவற்றிற்கு எதிரான தினமான ஜூன் 26ஆம் திகதியன்று எல்லாப் பிரதேசங்களிலும் அத் தினம் அனுஷ்டிக்கப்பட வேணடும் என்பதுடன், போதைப் பாவனை மற்றும் சட்டவிரோதக் கடத்தல், முகநூல் பாவனை, பாலியல் துஷ் பிரயோகம், மதுபாவனை, புகையிலைப் பாவனை, தெருவிபத்து, மாணவர் சரீரதண்டனை, வீண் வார்த்தைப் பிரயோகம் போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

இதில் முழு மாண வரகளும் பங்குபற்றவேண்டுமென் பதில்லை. மக்கள் அதிகமாகக் காணப்படும் இடங்களில் அனுஷ் டிக்கப்பட வேண்டும்.

இதனடிப்படையில் போதைப் பாவனை மற்றும் சட்டவிரோதக் கடத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வு நடைபவனியினை காலை 8.20 தொடக்கம் 10 மணி வரை செய்வது பொருத்தமானது. இங்கு அதிகளவான பதாகைகள் பயன்படுத்தப்பட வேண்டியதுடன், பதாகைகளில் குறிப்பிடப்பட வேண்டிய வாசகங்கள் அந்தந்த வலயங்களினால் தீர்மானிக்கப்படவேண்டும். மேலும் கட்டாயமாக விழிப்புணர்வு நடைபவனிகள் நடைபெற வேண்டிய பின்வரும் சில இடங்களும் இனங் காணப்பட்டன.

1.தீவக வலயம்: வேலணை நகரம், நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை.

2.யாழ்ப்பாண வலயம்: யாழ் நகரம், கொக்குவில், திருநெல்வேலி, ஆவரங்கால் ,அச்சுவேலி, உரும்பிராய்

3.வலிகாம வலயம்: சங்கானை நகரம், வட்டுக்கோட்டை, மருதனார் மடம், சுன்னாகம், மானிபபாய், பண்டத்தரிப்பு, கீரிமலை.

4.தென் மராட்சி:சாவகச்சேரி நகரம், கொடிகாமம், கைதடி, நாவற்குழி.

5.வடமராட்சி: பருத்தித்துறை, குடத்தனை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, உடுத்துறை.

6. கிளிநொச்சி: பளை, தர்மபுரம், கிளிநொச்சிநகரம், முழுங்காவில்

7.துணுக்காய்: ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி, பாண்டியன்குளம்.

8.முல்லைத்தீவு: முல்லைத்தீவுநகரம், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை,

9.மடு: அடம்பன்

10.மன்னார்: மன்னார் நகரம், முசலி, நானாட்டான், முருங்கன், வங்காலை.

11.வவுனியாவடக்கு: கனகராயன்குளம், புளியங்குளம், ஓமந்தை, புதுக்குளம், கிராஞ்சி

12. வவுனியாதெற்கு: வவுனியா நகரம், நெடுங்குளம், செட்டிகுளம், பரக்கும்பர போன்ற இடங்களில் இடம்பெறவுள்ளது. (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## துயிலிக்கீரை/தொய்யில் கீரை



**Botanical Name:** Amaranthus polygonoides

**Family:** Amaranthaceae

செடி வகையைச் சார்ந்தது. சிறிய இலைகள் 0.7-1.5 செ.மீ. நீள்மும் 1-2 செ.மீ. அகலமும் உடையது. கோள அல்லது நீள் கோள வடிவினது. மழுங்கிய இலை நுனியை உடையது. 0.3-1செ.மீ. நீளமான இலைக்காம்புடையது. சிறிய ஒழுங்கான ஒருபாலான பூக்கள். ஒரு மி.மீ. விட்டமுடைய விதைகள் கடும் மண்ணிறமானவை. வருடம் முழுவதும் பூக்களைக்காணலாம்.

வறண்ட கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் இக்கீரையின் பரம்பல் அதிகம். களைப்பயிராக வளரும் ஒரு சிறந்த மூலிக்கீரையாகும்.

இக்கீரை சற்று புளிப்பாக இருக்கும். உடலுக்கு வெப்பத்தைத் தரும் இக்கீரையை சமைத்துண்ணமலக்கட்டு, வெள்ளை சாய்தல் நீங்கும்.

✦ துயிலிக்கீரை, தூதுவளை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து 5 கிராம் அளவு சாப்பிட்டால் சளி, இருமல் போன்ற கப நோய்கள் நீங்கும்.

✦ துயிலிக்கீரைச்சாற்றில் சிற்றரத்தையை ஊறவைத்து உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு சாப்பிட்டால் மூச்சிரைப்பு, ஆஸ்துமா குணமாகும்.

✦ துயிலிக்கீரையுடன் துவரம் பருப்பு சேர்த்து கடைந்து சாப்பிட்டுவர வயிற்றுப்பொருமல், பசிமந்தம் நீங்கி நன்கு பசி எடுக்கும்.

✦ துயிலிக்கீரைச்சாற்றில் அமுக்கிரா பொடி 1-2 கிராம் சேர்த்து காலை, மாலை சாப்பிட உடற் பலவீனம் நீங்கி நரம்பு பலப்படும்.

✦ துயிலிக்கீரை ஒரு பங்கு, மிளகு கால் பங்கு எடுத்து 4 பங்கு நீர் விட்டு கால்பங்கை குடிநீர் காய்ச்சி 30 மி.லீ. காலை , மாலை குடித்து வர வலிப்பு நோயின் தீவிரம் குறையும்.

✦ துயிலிக்கீரையும் பெருங்காயமும் சேர்த்து அவித்துச் சாப்பிட்டால் வயிற்றுவலி நீங்கும்.

✦ துயிலிக்கீரையுடன் சிறிது மஞ் சள் சேர்த்து அரைத்து 5 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நீங்கும்.

✦ துயிலிக்கீரையுடன் உள்ளி சேர்த்து அவித்துச்சாப்பிட்டுவரதலைப் பாரம் குணமாகும்.

✦ துயிலிக்கீரைச்சாற்றில் மாசிக்காயை ஊறவைத்து உலர்த்தி, பொடித்து மூக்குப்பொடி போல் மூக்கில் உறிஞ்சுக் கொண்டால் மூக்கடைப்பு விலகும்.

✦ துயிலிக்கீரைச்சாறு 100 மில்லி, நல்லெண்ணெய் 100 மில்லி சேர்த்துக்காய்ச்சி தைலப்பதத்தில் இறக்கி ஆறியபின்பு மார்பில் தேய்த்துவர நுரையீரல் கோளாறுகள் நீங்கும்.

### துயிலிக்கீரை சூப்

துயிலிக்கீரை– தேவையான அளவு
பெருஞ்சீரகம்– அரை தேக்கரண்டி
தேங்காய் துருவல்– அரை மூடி
உலர்ந்த மல்லி –3 மேசைக்கரண்டி
வெந்தயம்– அரைத் தேக்கரண்டி
வெங்காயம் பொடியாக நறுக்கியது – கால் கப்
மஞ்சள் – ஒரு சிறிய துண்டு
தேவையான அளவு உப்பு

முதலில் இலையை அலசிக்கொள்ளவும். அம்மியில் மல்லி, மஞ்சள் இவற்றை மெதுவாக அரைத்து பின்பு தேங்காய், பெருஞ்சீரகம் வைத்து அரைக்கவும். பின்பு அம்மியைக் கழுவி அரைத்தவிழுதை அரிசி களைந்த நீரில் கரைத்து அதில் உப்பு போட்டு அடுப்பில் வைத்து கொதிக்க விடவும். கொதி வந்ததும் வெங்காயம் போடவும். நன்கு கொதித்து வெங்காயம் வெந்து வாசனை வந்ததும் இறக்கும் சமயத்தில் வெந்தயம் போடவும். 5 நிமிடம் கழித்து இறக்கவும்.

இக்கீரை சூப் சிறந்த ரொனிக்காக இருப்பதோடு வெள்ளை சாய்தல், குடற்புண், வாய்ப்புண் போன்றவற்றிற்கு சிறந்ததாகும்.

இம்மூலிகையை பணம் கொடுத்து பெறவேண்டிய அவசியமில்லை. தரிசு நிலங்களில் தானாகப் பரவி முளைத்து காணப்படும். அத்துடன் அசேதன உரங்களில் தாக்கமும் இராது. இவ்வெப்பகாலத்திற்கு சிறந்த சூப் வகையாகும்.

### துயிலிக்கீரை பொடி

துயிலிக்கீரை எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எடுத்துக்கொள்ள வேண்டும். மிளகு கீரைக்கேற்ப, சீரகம்.

கீரையை மிளகு, சீரகம் அளவைவிட 10 மடங்கு அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டும். செத்தல் மிளகாய், உளுத்தம்பருப்பு அளவிற்கேற்ப.

பசுமையான துயிலிக்கீரையை ஒன்றாக நிழலில் உலர்த்தி அரித்து வைத்துக்கொள்ளவும். வாணலியில் உளுந்து, செத்தல், மிளகு, சீரகம் இவைகளை பொன் வறுவலாக வறுத்து பொடித்து அரித்து கீரைப்பொடியையும் மேற்படி பொடியையும் கலந்து மீண்டும் அரித்து ஒரு போத்தலில் அடைத்து வைக்கவும்.

சாப்பிடும்போது ஒரு தேக்கரண்டி பொடி எடுத்து நெய் சேர்த்து சாதத்துடன் சேர்த்துச் சாப்பிட்டுவர சிறுநீர் நன்கு வெளிப்படும், மலக்கட்டு நீங்கும். இரத்தம் சுத்தியாகும். உடற்பலவீனம் நீங்கி உடல் வன்மை பெறும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய்க்கும் சிறந்தது. மற்றும் வாய்ப்புண், குடற்புண் ஆகியவற்றையும் நீக்கும்.

குறிப்பு: உடல்வலி, மூட்டுவலி உள்ளவர்கள் துயிலிக்கீரை/தொய்யில்கீரையை வாரத்தில் 3 நாட்கள் சமைத்துச் சாப்பிடலாம். துவரம் பருப்புடன் சேர்த்து கடைந்து சாப்பிட்டு வந்தால் உடலில் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலுக்கு பாதுகாப்பான மூலி உணவாகவும் அமையும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் சார்புடைய அமைப்புக்களின் பெயர்ப் பட்டியல் அரசால் மீளாய்வு!

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு

(கொழும்பு)

**தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் மற்றும் அதன் அமைப்புக்களின் பெயர்ப் பட்டியலை புதிய அரசாங்கம் மீளாய்வு செய்யுமென வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி தேர்தல் வருவதை அறிந்து மகிந்த ராஜபக்ஷ நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் உயிர் பெறுவதாக சித்திரிக்கும் வகையில் அவசர அவசரமாக இந்த தடைப்பட்டியலை தயாரித்திருந்தார்.

இதில் சுமார் 5 அல்லது 6 வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன. இதன் நம்பகத்தன்மையை மீள உறுதி செய்யும் நோக்கில் தடைப் பட்டியலை மீளாய்வு செய்யும் வேலைத்திட்டத்தில் புதிய அரசாங்கம் களமிறங்கியிருப்பதாகவும் அமைச்சர் சமரவீர மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறவுள்ள புலம்பெயர்ந்தோருக்கான விழாவில் (Diaspora Festival) தடைப் பட்டியலிலுள்ள வெளிநாடுகளில் வாழும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் கொள்வார்களா வென அமைச்சர் சமரவீரவிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு விளக்கமளித்தார்.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை மீண்டும் தாய் நாட்டிற்கு அழைப்பதே இந்த விழாவின் நோக்கமாகும். எனினும் தடை செய்யப்பட்டுள்ள பட்டியலில் இருக்கும் அனைவரும் தீவிர வாதிகளா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் பெயர்களும் அந்தப் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2014ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு அரசியல் நோக்கிலேயே இந்த தடைப்பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது. இதனை நாம் மீளாய்வுக்குட்படுத்தி வருகின்றோம். அதற்கமைய உண்மையான தீவிரவாதிகளை எம்மால் அடையாளம் கண்டுகொள்ள முடியுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, நாம் புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்களுடனும் பேச்சு நடத்துகின்றோம். இதன்படி பிரிவினைவாதம் இல்லாத ஒன்றிணைந்த இலங்கையை உருவாக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

புலம்பெயர் வாழ் இலங்கையர்களுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டுமென்பதே மகிந்த ராஜபக்ஷவின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் முக்கிய கொள்கையாகும். அவர் செய்யத் தவறியதை நாம் செய்கிறோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அறிக்கையை வாசிக்க தவறிவிட்டமைக்காக நான் வருந்துகிறேன் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கான 10 நாட்கள் பயிற்சி நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மங்கள சமரவீர நிகழ்வின் இறுதியில் ஊடகவியலாளரால் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 160 | 160 | 140 |
| தக்காளி | 120 | 100 | 100 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 80 | 60 | 60 |
| கோவா | 100 | 100 | 100 | 100 | 80 |
| கரட் | 200 | 200 | 280 | 180-280 | 150 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 100 | 60 | 40 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 160 | 120-160 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 | 110 | 110 |
| பாகற்காய் | 250 | 220 | 120 | 300 | 150 |
| வெண்டிக்காய் | 120 | 140 | 120 | 120-160 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 140 | 100 | 100 |
| பயற்றங்காய் | 160 | 150 | 120 | 160 | 160 |
| லீக்ஸ் | 200 | 160 | 180 | 160 | 140 |
| பீற்றூட் | 120 | 120 | 140 | 100 | 70 |
| கறிமிளகாய் | 150 | 200 | 200 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 350 | 500 | 800 | 800 |
| போஞ்சி | 200 | 250 | 280 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 30 | — | 50 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 20 | 30 | 10 |
| தேசிக்காய் | 160 | 120 | 120 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 130 | 160 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 300 | — | 200 |
| முள்ளங்கி | 120 | 60 | 100 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 411

அகன்யா சிவஞானம்




மெரினா அந்தோனிப்பிள்ளை




துசா துசானி

**அப்பா கவுண்டமணியும் மகன் செந்திலும்**

கவுண்டமணி : ஊர்ல இருக்கிற புள்ளைக எப்பிடியெல்லாம் படிக்கிறாங்க நானும் ஒன்ன பெத்து வைச்சிருக்கனே

செந்தில் : யோவ் அப்பா நான் முட்டை மார்க் வாங்கியிருக்கன் கௌரவமா சொல்லு

கவுண்டமணி : டேய்வைத்தெரிச்சலை கிளப்பாதடா கஷ்டப்பட்டு படிக்க வைச்சா எகத்தாளமாத் தான் இருக்கும்.

செந்தில் : அப்ப நான் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்லு பார்ப்பம்.

கவுண்டமணி : கேட்டுத் தொலையடா

செந்தில் : பாஸ் மார்க் வாங்கின பொண்ணு ஆம்லெட் சாப்பிடனும்னு ஆசைப்பட்டா என்ன செய்வா?

கவுண்டமணி : அவ அம்மாக்கிட்ட கேட்பா

செந்தில் : ஐயோ முதல்ல முட்டை வாங்கனும்.

கவுண்டமணி : அதுக்கும் நீ வாங்கின மார்க்குக்கும் என்னடா சம்பந்தம்?


செந்தில் : பாஸ் மார்க் வாங்கின பொண்ணாவே இருந்தாலும் ஆம்லெட் சாப்பிட முட்டைதான் வாங்கனும்... நான் என் மார்க்கிலேயே முட்டை முட்டையா வாங்கி வைச்சிருக்கன் அப்ப யாரு அறிவாளி!!! இப்ப சொல்லுங்க?

கவுண்டமணி : அட லூசா உன்னை வெட்டி நாய்க்கு போட்டாத் தான் நிம்மதி...

பரீணா அல்பிரட்




அகல்யா சிவஞானம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இருண்ட யுகத்துக்குள் இலங்கை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அனைவரும் எதிர்பார்த்தது போலவே இனவாதத்தை முன்னிலைப்படுத்தியவாறு தனது அரசியல் மறு பிரவேசத்தை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார். மாத்தறையில கடந்த 12 ஆம் திகதி நடத்தப்பட்ட மஹிந்த ஆதரவு அணியினரின் கூட்டத்துக்கு சென்று உற்சாகப்படுத்தியிருந்த அவர், தாம் பிரதமர் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார். இதே பத்தியில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கூறியிருந்த பல விடயங்கள், அப்படியே மாத்தறை கூட்டத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ அனுப்பியிருந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. "தாம் ஆட்சியில் இல்லாத காலத்தில் நாட்டில் நிலைமைகள் மோசமடைந்துள்ளதை சுட்டிக்காட்டுவார். வடக்கில் முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட் டதையும் நீதிமன்றம் தாக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டுவார். இடைநிறுத்தப்பட்ட சீன அபிவிருத்தித்திட்டங்களால் நாட்டின் பொருளாதாரம் முடங்கிப் போயுள்ளதாக கூறுவார்.

உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் விடுவிக்கப்பட்டதால், பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளதாக புலம்புவார். இப்படி தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளையெல்லாம் குறைகூறி, இவற்றினால் நாடு பேராபத்தில் சிக்கியுள்ளதாக கூறப்போகிறார். கடைசியாக, இந்த ஆபத்திலிருந்து நாட்டை பாதுகாக்க மீண்டும் அரசியலுக்கு வாருங்கள் என்று மக்களும் மகாசங்கத்தினரும் தன்னை கெஞ்சிக் கேட்டுக்கொண்டதன் பேரில், பிரதமர் வேட்பாளராக போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக கூறுவார்." இவ்வாறு இரண்டு வாரங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

மாத்தறையில் நடந்த கூட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷவினால் அனுப்பிவைக்கப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவினால் வாசிக்கப்பட்ட செய்தியில், இந்த அம்சங்கள் பலவும் இடம்பெற்றிருந்ததை அவதானிக்க முடிகின்றது. அதில் அவர், "அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிட மக்கள் விடுத்துள்ள அழைப்பை ஏற்றுக் கொள்கிறேன். 2009 இல் எனது அரசாங்கத்தினால் தோற்கடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு உயிர் கொடுக்கும் வகையில் புதிய அரசாங்கம் செயற்படுகிறது.

யாழ். குடாநாட்டிலிருந்த 152 இராணுவ முகாம்களில் 59 முகாம்களை மூடியுள்ளனர். தற்போது தடுப்புக்காவலிலுள்ள புலிகளையும் விடுவிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கை விடுதலைப் புலிகளுக்கு சார்பானது என்பதால் நாடு ஆபத்தில் சிக்கியுள்ளது. விடுதலைப் புலிகளை தோற்கடிக்க ரஷ்யாவும் சீனாவும் உதவியளித்தன. இப்போதைய அரசாங்கம் சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட எல்லாத் திட்டங்களையும் நிறுத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுப்பதை தடுப்பதற்கு மக்கள் முன்நோக்கி வரத் தயாராகவேண்டும்" என்று அவர் கூறியிருக்கிறார்.

அதாவது, நாடு விடுதலைப் புலிகளின் கைகளுக்குள் சென்றுகொண்டிருக்கிறது, பேராபத்து சூழ்கிறது, காப்பாற்ற வரப்போகிறேன் என்ற தொனியிலேயே மஹிந்த ராஜபக்ஷவின் செய்தி அமைந்திருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளையும் இனவாதத்தையும் முன்னிறுத்தியே அடுத்தகட்ட அரசியலை ஆரம்பிக்கப் போகிறார் என்பது ஏற்கனவே தெரிந்த விடயம். அதனாலேயே பல விடயங்களில் தற்போதைய அரசாங்கம், சில நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கியது. அல்லது பிற்போட்டது. அதுபோலவே, மஹிந்த ராஜபக்ஷவின் மீள்வருகைக்கு துணை போகக் கூடாது என்ற பயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒதுங்கி நின்றது. அடக்கி வாசித்தது. இருந்தாலும், மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் தந்திரோபாயத்தை மாற்றிக்கொள்ளாமலேயே, தனது அரசியல் நகர்வை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு இவற்றை விட்டால் வேறு வழியினூடாக அரசியலில் தலை எடுக்கமுடியாது. அவரால் விடுதலைப் புலிகள், இனவாதம் ஆகியவற்றை வைத்தே அரசியல் செய்ய முடியும். அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் நகர்வுகளுக்கு பல சமயங்களில் தற்போதைய அரசாங்கமும் துணையாக மாறிவிட்டது. மாத்தறை கூட்டத்தில் மஹிந்த வைத்த முக்கியமான குற்றச்சாட்டுக்களில் ஒன்று, யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்த 152 இராணுவ முகாம்களில் 59 முகாம்களை புதிய அரசாங்கம் அகற்றிவிட்டது என்பதாகும். மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்த புள்ளிவிபரங்களை கொடுத்தவர் யாழ். படைகளின் தலைமையகத் தளபதியான மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த. இது தனிப்பட்ட முறையில் கொடுக்கப்பட்ட புள்ளிவிபரம் அல்ல.



அதுபோல, மஹிந்த ராஜபக்ஷ கூறியதுபோல சரியான புள்ளிவிபரமும் அல்ல. அண்மையில யாழ். படைகளின் தலைமையகத்தில் கொழும்பிலிருந்து அழைத்துச்செல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பங்கேற்ற ஒரு செய்தியாளர் மாநாடு நடத்தப்பட்டது. அதில், வடக்கில் அதிகளவில் இராணுவம் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுமத்திய குற்றச்சாட்டை நிராகரிப்பதற்காகவே, ஒரு புள்ளிவிபரத்தை வெளியிட்டிருந்தார் மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த.

அதன்படி, யாழ்ப்பாணத்தில் 152 இராணுவ முகாம்கள் இருந்ததாகவும் ஆனால், போர் முடிவுக்கு வந்த பின்னர் பாதுகாப்பு நிலைமைகளின் முன்னேற்றத்தை அடிப்படையாக கொண்டு 59 இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியிருந்தார். தற்போது 93 இராணுவ முகாம்களே இருப்பதாகவும் எனினும், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த கூறிய புள்ளிவிபரங்களை வைத்து மஹிந்த ராஜபக்ஷ, புதிய அரசாங்கம் 59 இராணுவ முகாம்களை கடந்த ஜனவரிக்கு பின்னர் அகற்றிவிட்டதாக புலம்பியிருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த கூறியதன் அடிப்படை அம்சங்கள் புரியவில்லை என்று எவரும் நினைத்தால் அது முட்டாள்த்தனம். அவருக்கு தாம் கூறும் செய்தி தவறானது என்று நிச்சயம் தெரிந்தேயிருக்கும். புதிய அரசாங்கம் 59 இராணுவ முகாம்களை யாழ்ப்பாணத்தில் அகற்றியிருக்கிறது என்ற பரபரப்பான செய்தி மக்களுக்கு சென்று சேரவேண்டும் என்று எதிர்பார்த்தே அவர் அந்த தகவலை தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இது சிங்கள மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவர் நன்கறிவார்.

அவர் எதிர்பார்த்தது போலவே சிங்கள மக்கள் மத்தியில் அந்தச் செய்தி பரபரப்பாக ஊடுருவியதுடன் ஊடகங்களும் அவ்வாறே செய்திகளைப் பரப்பின. இதனால், இராணுவத் தலைமையகத்தை வைத்து ஒரு மறுப்பு அறிக்கையை வெளியிட வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இதையடுத்து, ஜனவரிக்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் 59 இராணுவ முகாம்களை மூடியுள்ளதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என்று கடந்த 16 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

அதன்படி, 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர 59 இராணுவ முகாம்கள் மூடப்பட்டதாகவும் எனினும், இந்த ஆண்டில் எந்தவொரு முகாமும் மூடப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. 2009 இல் 7 முகாம்களும் 2010 இல் 9 முகாம்களும் 2011 இல் 4 முகாம்களும் 2013 இல் 15 முகாம்களும் 2014 இல் 24 முகாம்களும் மூடப்பட்டதான புள்ளி விபரங்களை இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ளது. 2012 இலும் 2015 இலும் எந்தவொரு இராணுவ முகாமும் மூடப்படவில்லை என்பதை அந்த அறிக்கை தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறது. இருந்தாலும், சிங்கள மக்களிடையே, வடக்கில் இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தியுள்ள ஒரு விம்பத்தை இந்த மறுப்பு அறிக்கை அழித்துவிடும் என்று கருதுவதற்கில்லை.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ, பொய்யானதும் போலியானதுமான பிரசாரங்களின மூலம் சிங்கள மக்களை இலகுவாக ஏமாற்றி அரசியல் நடத்தவே எத்தனிக்கிறார் என்பது இதன்மூலம் உறுதியாகியிருக்கிறது. வடக்கில் ஏற்பட்டுவருகின்ற இயல்பு நிலையை அவரால் சகித்துக்கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியாதிருக்கிறது. ஏனென்றால், அவர வடக்கை இராணுவ ஆட்சியின் கீழ்தான் வைத்திருந்தார். அந்த நிலை இப்போது முற்றாக மாறிவிட்டது என்று கூறமுடியா விடினும், ஒப்பீட்டளவில் முன்னேற்றங்கள் இருப்பதை மறுப்பதற்கில்லை.

வடக்கை மீண்டும் இராணுவ அடக்குமுறைகளுக்குள் அடக்கி வைத்திருப்பதற்காகவே அவர் விடுதலைப் புலிகள் என்ற பிரசாரத்தையும் கையில் எடுத்திருக்கிறார். விடுதலைப் புலிகள் மீண்டெழுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்று மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே சான்றிதழ் கொடுத்திருந்தார். ஆனாலும், மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகள் என்ற இல்லாத ஒரு மாய விம்பத்தை இப்போதும் உருவாக்கப் பார்க்கிறார்.

இதன்மூலம் சிங்கள மக்களை பீதியூட்டி அவர்களின் வாக்குகளை கவர எத்தனிக்கிறார். மஹிந்த ராஜபக்ஷவின் இந்த அணுகுமுறையானது தற்போதைய அரசாங்கத்துக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் அச்சத்தை கொடுத்திருக்கிறது. அதைவிட சர்வதேச சமூகமும் இதையிட்டு சற்று மிரளவே செய்கிறது. ஏனென்றால், மஹிந்த ராஜபக்ஷவின் இந்த அரசியல் நகர்வு இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தி விடக்கூடியது. ஒரு பக்கத்தில் இனங்களுக்கிடையில் பதற்றத்தை தணித்து, அமைதியை ஏற்படுத்தி, நல்லிணக்கத்துக்கான சூழலை உருவாக்கும் முயறசிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொணடிருக்கும்போது, மஹிந்த ராஜபக்ஷவின் அறிககைகள், கருத்துக்கள் இனங்களுக்கிடையில் சந்தேகங்களையும் கோபத்தையும் தூண்டும் வகையில் அமைந்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் விவகாரம், பாதுகாப்பு விவகாரங்களில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள், சிங்கள மக்களிடையே அரசாங்கத்தின் மீது மட்டும் கோபத்தை ஏற்படுத்தக் கூடியவையல்ல. அது தமிழ் மக்கள் மீதான சந்தேகத்தையும் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தும். அதுபோலவே, மஹிந்த ராஜபக்ஷவின் இத்தகைய கருத்துக்கள் தமிழ் மக்களிடையே வெறுப்பையும் அதேநேரம், இன நல்லிணக்க முயற்சிகளின் மீதான நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தும்.

சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான அரசியல் போட்டியானது, இத்தகையதொரு அகன்ற பிளவை தோற்றுவித்து வருகிறது. உண்மையில் இப்போது விடுதலைப்புலிகளோ, நாட்டின் பாதுகாப்பு நிலைமையோ நாட்டின் முக்கியமான பிரச்சினை அல்ல. நாட்டை முன்னேற்றுவதற்கான கொள்கைகளை முன்னிறுத்தவேண்டியதே அவசியமானது. ஆனால், அதையிட்டு மஹிந்த ராஜபக்ஷ கவலைப் பட்டதாக தெரியவில்லை. அவரது குறி எப்படி சிங்கள மக்களின் ஆதரவை குறுக்கு வழியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதாகவே இருக்கிறது. இனவாதத்தை தூண்டுவதன் மூலம் சிங்கள மக்களை இலகுவாக தன்பக்கம் திருப்பலாம் என்று அவர் வலுவாக நம்புவதால், இந்த வழியை தெரிவு செய்திருக்கிறார். அவரது இந்த வழிமுறையை யாராலும் தடுக்க முடியாது. ஆனால், இதன் விளைவை ஒட்டுமொத்தமாக இலங்கைத்தீவு அனுபவிக்க நேரிடும். இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிந்து ஆறு ஆண்டுகளாகியுள்ளன. ஆனாலும், அமைதி இன்னமும் தோன்றவில்லை என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகியுள்ளது.

இலங்கையில் நிலையான அமைதியை தோற்றுவிக்க வேண்டுமானால், சிங்கள இனவாதம் வலுக்குன்றவேண்டும். மஹிந்த ராஜபக்ஷவின் மீள் அரசியல் பிரவேசம் என்பது அதற்கு மாறான விளைவையே கொடுக்கும். அதாவது, சிங்கள இனவாதத்தை மேலும் வலுப்படுத்தவே அவர் முனைகிறார். தெற்கில் இனவாதம் கூர்மைப்படுத்தப்படும்போது, இயல்பாகவே நல்லிணக்கச் சூழல் மறைந்துபோகும். அத்தகைய நிலையை நோக்கி நாட்டை நகர்த்துவதே மஹிந்த ராஜபக்ஷவின் இலக்ககாகத் தெரிகிறது. தாம் சிறுபான்மையின மக்களால் நிராகரிக்கப்பட்டவர் என்பதை மஹிந்த ராஜபக்ஷ மறந்துவிடவில்லை.

அத்துடன், இனிமேலும் சிறுபான்மையின மக்களின் ஆதரவை பெறமுடியும் எனற நம்பிக்கையும் அவரிடத்தில் இல்லை. எனவே, அவர் சிங்கள இனவாதத்தை கூர்மைப்படுத்துவதன் மூலமே தனது அரசியல் அடித்தளத்தை உறுதிப்படுத்த முடியும் என்று கருதுகிறார். இது சிறுபான்மையின மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஒரு ஆபத்தான அறிகுறியாகவே இருக்கும். மஹிந்த ராஜபக்ஷவின் மீள் வருகை என்பது இலங்கையை மீண்டும் இருண்ட யுகத்துக்கு கொண்டு செல்வதாகவே அமையலாம். அதனையே அவரது இப்போதைய நகர்வுகளிலிருந்து உய்த்துணர முடிகிறது.


-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்த ராஜபக்ஷவின்

# நல்ல விடயங்களை மறந்து விடக்கூடாது

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நல்ல மற்றும் கெட்ட விடயங்கள் இருந்தன. கெட்ட விடயங்களுக்காக அவரது நல்ல விடயங்களை மறந்துவிட முடியாது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் தலைவர்கள் இருவரை இணைத்துக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முன்னோக்கி நகர்த்துவதில் தவறில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்விவகாரங்கள் குறித்து பிரச்சினையில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றாரா? இல்லையா? என்பது தான் மிகவும் முக்கியமானது.

சந்திரிகாவையும் மகிந்தவையும் இணைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிபெறச் செய்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்தின் அர்த்தம் புரியவில்லை.

முன்னாள் தலைவர்கள் இணைகின்றார்களா? இல்லையா? என்பதனை விடவும் மூன்றாவது தலைவரின் கீழ் கட்சி புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே சமூகத்தின் நோக்கமாகும்.

20 ஆண்டுகளுக்கு மேல் நாட்டை ஆட்சி செய்த கட்சி என்ற ரீதியில் இந்த மாற்றம் அவசியமானது என சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிரதமர் வேட்பாளராக நிறுத்துமாறு மகிந்த ஜனாதிபதியிடம் கோரவில்லை

## விமல் வீரவன்ச கூறுகிறார்



பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நியமிக்குமாறு அவரோ அல்லது நாமோ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரவில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தாமோ அல்லது மகிந்தவோ பிரதமர் வேட்பாளராக நியமிக்குமாறு கோரவில்லை.

கூட்டமைப்பு வெற்றியீட்ட மகிந்த தேவையே தவிர, மகிந்த வெற்றியீட்ட கூட்டமைப்பு தேவையில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையானவர்கள் கட்சியின் ஒற்றுமையை ஏற்படுத்த மெய்யாகவே முயற்சிக்கின்றனர்.

இதனை நாம் தடுக்கவில்லை என விமல் வீரவன்ச நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (இ-5)

# இளம் பிக்கு தற்கொலை

இங்கிரிய, ரம்புக்கனகம பிரதேசத்தில் பௌத்த பிக்கு ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்துள்ள பிக்கு பண்டாரவளை விகாரையொன்றில் பணியாற்றியுள்ளார். 29 வயதையுடைய இவர் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவர் என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ரம்புக்கனகம பிரதேசத்திலுள்ள தேயிலைத் தோட்டமொன்றிலிருந்து தேரரின் சடலம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் இவரது சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார். (இ-5)

# நாட்டையும் மக்களையும் கருத்திற்கொண்டு அரசியல்வாதிகள் செயற்படுதல் வேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதி- சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டையும் மக்களையும் கருத்திற்கொண்டு அரசியல்வாதிகள் செயற்பட வேண்டுமென கண்டி அஸ்கிரிய பீடாதிபதி கலகம ஸ்ரீஅத்தாதஸ்ஸி தேரர் அரசியல் வாதிகளிடம் கோரியுள்ளார்.

அரசியல் ரீதியாக முக்கியமற்ற விடயங்களை தூக்கிப்பிடித்துக் கொண்டு ஒருவர் மாறி ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதனை விடவும் நாட்டையும் மக்களையும் முதன்மைப்படுத்தி செயற்பட வேண்டியது அவசியமானது.


20 ஆம் திருத்தச் சட்டம் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அரசியல்வாதிகள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

பல்வேறு கருத்துக்களை வெளியிடுவதனை விடவும் நாட்டை அபிவிருத்தி செய்வது குறித்தே அரசியல்வாதிகள் கவனம் செலுத்த வேண்டும்.

அரசியல் அமைப்பு திருத்தங்களின் பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென சிலர் கோருகின்றனர். எனினும், பொருத்தமான நேரத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது.

அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பில் பூரண தெளிவுடையவர்கள் மட்டுமே கருத்து வெளியிட வேண்டும். தெரியாத விடயங்கள் குறித்து எல்லோரும் பேசக் கூடாது.

நாட்டில் சர்ச்சைக்குரிய நிலைமையை ஏற்படுத்தாது நாட்டினதும், மக்களினதும் நலனை முதன்மையாகக் கொண்டு அரசியல்வாதிகள் செயற்பட வேண்டியது அவசியமானது என கலகம ஸ்ரீ அத்தாதஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.



கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ், நேற்று முன்தினம் அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட போது இந்தக் கருத்துக்களை அஸ்கிரிய பீடாதிபதி வெளியிட்டுள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## உள்மன ஆற்றல்

தையல் ஊசியைக் கண்டு பிடிப்பதற்காக பலகாலம் தலையைப் பிய்த்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார் ஹோ என்ற விஞ்ஞானி.

அவருக்குப் பிடிபடாமலிருந்த விடயம் என்னவென்றால், அந்த ஊசியின் கூர்மையான பாகத்தில் நூலை எப்படிச் சேர்ப்பது என்பது தான்.

ஏனைய பாகம் மெசினுக்குள்ளே போய்விடுகிறது. அதனால் அந்தப் பாகத்தில் சாதாரணமற்ற ஊசியில் செய்வது போல் நூலை நுழைக்க முடியாது. அப்படி நுழைத்தாலும் எப்படி தைப்பது? இது தான் அவருக்குக்கிருந்த பிரச்சினை.

நீண்டநாள் யோசித்தார். தையல் மெஷின் ஊசியின் வடிவமைப்பு அவருக்குப் புலப்படவில்லை. இரவு பகலாக அதே ஞாபகமாக இருந்தார். ஒருநாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு கனவு கண்டார்.

அந்தக் கனவில் அவரை ஒரு மலைச் சாதியினர் பிடித்துக் கொண்டு போய் ஒரு இடத்தில் கட்டிப்போட்டு விடுகிறார்கள்.

அந்த மலைச்சாதி மக்களின் அரசன் ஒருத்தன் வருகின்றான். அவனைப் பார்த்து ஒரு உத்தரவிடுகிறான்.

என்ன உத்தரவு தெரியுமா?

பொழுது சாய்வதற்குள் நீ தையல் மெஷின் ஊசியைக் கண்டு பிடிக்க வேண்டும். அப்படிக் கண்டு பிடிக்கவில்லையானால் உன்னுடைய தலையை வெட்டிவிடுவோம்.

இது தான் அரசன் போட்ட கட்டளை.

இவருக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை. திருதிருவென்று முழித்தார்.

இந்த நேரத்தில் அந்த மலைச்சாதியினர் அவரைச் சுற்றி சுற்றி வந்து பயங்கரமாக முழித்துக்கொண்டு நடனமாடுகிறார்கள்.

தன்னைச் சுற்றிச் சுற்றி ஆடிக்கொண்டு வரும் அவர்களை இவர் திகிலுடன் பார்க்கிறார். நேரம் ஆகஆக தன்னுடைய இறுதி நேரம் நெருங்குவதை உணர்ந்தார். மிகவும் நெருக்கடியான நிலைமை. தன்னைச் சுற்றிச்சுற்றி ஆடுபவர்களைக் கவனித்தார். அவர்களுடைய கைகளில் ஈட்டிபோன்ற ஓர் ஆயுதம் இருந்தது. அந்த ஆயுதத்தை இவருடைய கண்ணுக்கு நேராகக் கொண்டு வந்தார்கள். அதை அவர் பார்த்தார். அந்த ஆயுதத்தின் கூரான முனையை இவர் கூர்ந்து கவனித்தார்.

அந்தக் கூரான முனையில் ஒரு சின்ன துவாரம் தெரிந்தது. உடனே அவருக்குப் பளிச்சென்று ஒரு ஐடியா வந்தது. இதைத் தானே இவ்வளவு காலமும் நான் தேடிக் கொண்டிருந்தேன். கூரான முனையில் ஒரு சின்ன துவாரத்தைக் போட்டு விட்டால் அதன் மூலமாக நூலைச்செலுத்தி மறுமுனையை மெஷினில் வைத்து விடலாமே. தையல் மெஷின் ஊசி ரெடி என்று நினைத்தார்.

திடீரென்று தூக்கம் கலைந்த உடனே தன் தலைமாட்டில் இருந்த குறிப்பேட்டில் இதைக் குறித்து வைத்துக் கொண்டார். அதன்பின் அந்த ஊசியையும் அவர் செய்து முடித்தார். இது எப்படியென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இது சாத்தியம் தான்.

முழித்துக்கொண்டிருக்கும் போது நமக்கு ஏற்படும் சில பிரச்சினைகளுக்குக் கனவில் விடை கிடைப்பதுண்டு. உங்களில் பலருக்கு இப்படியான அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். எந்த ஒரு செயலைப்பற்றி நினைக்கும் போதும் அந்தந்தச் செயல் நம்முடைய நினைவில் ஒரு நல்ல வடிவம் பெறுகிறது. ஒரு செயற்றிட்டத்தை எந்தளவுக்கு நாம் நன்றாக யோசனை செய்து திட்டம் போடுகிறோமோ அந்த அளவுக்கு அதை சுலபமாக செய்து முடிக்கமுடியும். அந்த விஞ்ஞானி நினைத்த காரியம் அவருடைய எண்ணம் முழுவதும் ஆக்கிரமித்தது. அதனால் அவர் நினைத்தது கனவில் உருவாகி அதற்கு செயல்வடிவம் கிடைத்தது.

மனிதனின் உள்மனதுக்கு அவ்வளவு ஆற்றல் உண்டு என்று சொல்கிறார். தூக்கத்தை அக்கபூர்வமாகப் உபயோகப்படுத்துவதெப்படி? என்பதைப் பற்றியெல்லாம் இப்பொழுது நிறைய ஆராய்ச்சி செய்கிறார்கள். பயிற்சியெல்லாம் கொடுக்கிறார்கள். அதனால் தூக்கத்தைக் பற்றி இலேசாக நினைத்துவிடாதீர்கள்.

நமக்கு வேண்டப்பட்ட ஒருத்தருக்கு தூக்கத்தில் நடக்கின்ற வியாதி இருந்தது. அதற்காக மருந்து எடுத்துக்கொண்டிருந்தார்.

ஒருநாள் அவரைப் பார்த்துக்கேட்டேன்.

ஏங்க ... தூக்கத்தில் நடக்கிற வியாதிக்கு மருந்து உள்ளெடுக்குறீங்களே..... ஏதாவது முன்னேற்றம் தெரியுதா? என்று கேட்டேன்.

தெரியுது என்றார்.

எப்படி என்றேன்.

முன்பெல்லாம் தூக்கத்தில் 10 அடிவரைக்கும் நடப்பேன். இப்பொழுது 40 அடிவரைக்கும் நடக்கிறேன் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்வானி பேச்சும் 1975 அவசரகால நிலையும்

"அவசரகால நிலையை அமுல்படுத்துவது பற்றி முதலில் அமைச்சரவையை கூட்டி முடிவு எடுத்திருப்பேன். துரதிர்ஷ்டவசமாக அதற்கு இன்று இரவு நேரம் இல்லை. ஆனால், நாளை காலை முதல் வேலையாக அமைச்சரவை கூட்டத்துக்கு தெரிவித்துவிடுவேன்"- இது இந்திய ஜனாதிபதியாக இருந்த பக்ருதீன் அலி அகமதுவுக்கு அன்று பிரதமராக இருந்த இந்திரா காந்தி எழுதிய "இரகசிய கடிததத்தின்" வாசகம்.



குடியரசுத் தலைவருக்கு இந்தக் கடிதத்தை அனுப்பிய அன்றைய உள் துறை அமைச்சர் பிரமாணந்த ரெட்டி, தனது உள்துறை அமைச்சர் கடிதத்தில் ஹெட்டில் அந்தக் கடிதத்தை அனுப்பாமல், சாதாரண வெள்ளைத்தாளில் அனுப்பினார் என்பது ஷா கமிஷன் விசாரணையில் வெளிவந்த பிரத்தியேக விடயம்.

இக்கடிதத்தின் அடிப்படையில்தான் இந்தியாவில் 1975 ஆம் ஆண்டு ஜூன் 25-26 நள்ளிரவில் நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கு இந்திய குடியரசுத் தலைவரும் அன்று ஒப்புதல் அளித்தார்.

அரசியல் தலைவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். மிசா, டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸ் போன்றவற்றின் அடிப்படையில் எல்லாம் நாடு முழுவதும் உள்ள 'எதிர்ப்பாளர்கள்' 'அதிருப்தியாளர்கள்' கைது செய்யப்பட்டார்கள்.

அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து பார்த்தால் வருகின்ற ஜூன் 26 ஆம் திகதி மிக முக்கியமான நாள். இந்திய ஜனநாயகத்தின் கறுப்பு நாள் என்று இன்றும் பேசப்படும் நாள். 'கருத்துச் சுதந்திரத்துக்கு' 'தனி மனித உரிமைக்கு'- ஏன் மொத்தத்தில் 'சுதந்திரக் காற்றை' சுவாசிப்பதற்கு எல்லாம் 'கைவிலங்கு' போட்ட நாள் முடிந்து நாற்பது ஆண்டுகள் இந்த 2015 ல் நிறைவு பெறுகிறது.

நாட்டில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டபோது இந்தியாவில் பணவீக்கம் 33 சதவீதம். இதனால் விலை வாசி விண்ணை முட்டி நின்றது. வங்க தேசப் போரின் தாக்கம் வேறு, பொருளாதாரத்துக்கு சவால் விட்டிருந்தது. போதாக்குறைக்கு 'ஒயில் நெருக்கடி' காரணமாக இந்தியாவின் பொருளாதாரம் மிகப் பெரிய கேள்விக்குறி யாக இருந்த வேளை. பதுக்கலும், கடத்தலும் கொடிகட்டி ஆண்ட வருடம் மட்டுமின்றி ரயில்வே வேலைநிறுத்த போராட்டம் நடைபெற்று நாட்டின் போக்குவரத்தும், பொருளாதாரமும் ஸ்தம்பித்து நின்ற நேரம். இப்படியொரு நேரத்தில்தான் 'இந்தியாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் தேவை' என்று தனக்கு வேண்டிய அமைச்சர்களிடம் பேசினார் இந்திரா காந்தி.

எல்லாவற்றுக்கும் மேலாக ஜெயப்பிரகாஷ் நாராயணனின் போராட்டம், அதையொட்டு மாணவர்கள் அவர்பின் திரண்டனர். பீஹார், குஜராத்தில் தொடங்கிய மாணவர் கிளர்ச்சி நாடு முழுவதும் பரவும் என்ற எண்ணம் மேலோங்கியது. இதற்கெல லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போல் இந்திராகாந்தி, நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டமை செல்லாது என்று ராஜ் நாராய ணன் தொடர்ந்த வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சின்ஹா தீர்ப்பளித் தார். அந்த அவசரத்தில், அவசரகால நிலையை அமைச்சரவையின் ஒப்புதலின் றியே அறிவித்தார் பிரதமராக இருந்த இந்திரா காந்தி.

முதலில் இப்போராட்டங்களை சமாளிக்க என்ன செய்வது என்று இந்திரா காந்தி யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் 'உள்நாட்டு கலவரங்களை அடக்கவும் நெருக்கடி நிலைமை கொண்டு வரலாம்' என்ற அதிகாரம அரசியல் சட்டத்தில் இருக்கிறது என்பதை இந்திராகாந்திக்கு நினைவூட்டியவர் அப்போது மேற்குவங்க முதலமைச்சராகவும், இந்திரா காந்திக்கும் மிகவும் நெருக்கமாகவும் இருந்த சித்தார்த்த சங்கர் ரே என்ற தகவல் அதிகார வட்டத்தில் உண்டு. இந்த நெருக்கடி நிலையின்போது அடக்குமுறை அளவு கடந்துபோனது. பொலிசாரின் அத்துமீறல்கள் இமயமலை உயரத்துக்கு உயர்ந்து நின்றன.

110,806 பேர் கைது செய்யப்பட்டார்கள். மத்திய, மாநில அரசு ஊழியர்கள் 25,962 பேர் கட்டாய ஓய்வு கொடுத்து வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். டெல்லியில் 150,105 பேரின் வீடுகள் புல்டோசர்கள் மூலம் இடிக்கப்பட்டு அவர்கள் எல்லாம் வேறு தங்குமிடம் கொடுக்கப்படாமல் விரட்டப்பட்டார்கள்.

சஞ்சய் காந்தியின் ஐந்து அம்சத் திட்டத்தின் கீழ், 1975-76 ஆம் ஆண்டுகளில் 2,624,755 பேருக்கும், 1976-77 ஆம் ஆண்டு 8,132,209 பேருக்கும் கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டது. பத்திரிகை அலுவலகங்களுக்கு மின்சார விநியோகம் நிறுத்தப்பட்டது. நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற நடவடிக்கை குறிப்புகளே தணிக்கைக்குப் பிறகுதான் வெளியிட முடியும் என்ற நிலைமை உருவானது. டெல்லி உயர் நீதிமன்றத்தில் இருந்த நீதிபதி ஆர்.என். அகர்வால் பதவியிறக்கம் செய்யப்பட்டு செசன்ஸ் நீதிபதியாக்கப்பட்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தவிர மொத்தம் 10 அரசியல் கட்சிகள் (காங்கிரஸ் (ஓ), பாரதிய ஜனசங்கம், தி.மு.க. உள்ளிட்ட) நெருக்கடி நிலைமையை கடுமையாக எதிர்த்தன. தமிழகத்தில் ஆட்சியிலிருந்து கொண்டே நெருக்கடி நிலையை எதிர்த்து தீர்மானம் போட்ட ஒரே கட்சி தி.மு.க. என்பதுதான் நெருக்கடி நிலை பற்றிய கடந்த கால வரலாறு.

இப்படி வந்த நெருக்கடி நிலைமைக்குப் பிறகு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் படு தோல்வியடைந்தது. ஜனநாயகம் திரும்பவும் வென்றது. இந்த நெருக்கடி நிலை என்றால் மூன்று பேரின் பெயர்களை மறக்க முடியாது. ஒன்று ஊழலுக்கு எதிராக இந்திய மக்களை ஒன்று திரட்டிய **ஜெயப்பிரகாஷ் நாராயணன்**. நெருக்கடி நிலைமை அமல்படுத்தப்பட்ட நள்ளிரவே கைது செய்யப்பட்டவர் இவர்.

இரண்டாவதாக இந்திரா காந்தியின் தேர்தலை இரத்து செய்த அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி **சின்ஹா**. மூன்றாவதாக உச்ச நீதிமன்ற நீதிபதி **எஸ்.சி. ஷா**. நெருக்கடி நிலைமையின் அத்துமீறல்கள் குறித்து விசாரித்து அறிக்கை கொடுத்தவர் இவர்தான்.

ஆனால், அன்றைக்கு ஒரு மாதத்துக்கு அவர் எவ்வளவு சம்பளம் வாங்கினார் தெரியுமா? வெறும் ஒரு ரூபாய். இந்திய ஜனநாயகத்தை மீட்கும் தன் பணிக்கு சம்பளம் எதற்கு என்று நினைத்த அவர் அடையாளமாக ஒரேயொரு ரூபாய் சம்பளத்தை வாங்கிக் கொண்டு விசாரணை அறிக்கையைக் கொடுத்தார்.

அந்த அளவுக்கு 'ஷா கமிஷன்' விசாரணை இந்தியாவில் பிரபலமானது. 1977 இல் தேர்தலுக்குப் பிறகு வந்த மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா அரசு மே 1977 இல் இந்த ஆணையத்தை அமைத்தது. அதன் அறிக்கை ஜூன் 1978 இல் கொடுக்கப்பட்டது.

ஆனால், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த இந்திரா காந்தி 'வெளியிடப்பட்ட அறிக்கை, விற்பனைக்கு வைத்திருந்த அறிக்கை என்று எல்லா ஷா கமிஷன் அறிக்கைகளையும் திரும்பப் பெற்று அத்தனை அறிக்கைகளையும் அழித்துவிட்டார்' என்றே குற்றச்சாட்டு எழுந்தது.

இன்றைக்கு, ஷா கமிஷன் அறிக்கையின் நகல் இந்தியாவில் ஒன்றுகூட இல்லை என்பதுதான் அன்றைய தினம் பத்திரிகைகள் அனைத்திலும் வந்த தலைப்புச் செய்திகள். ஆனால் நெருக்கடி நிலைமை குறித்து விசாரித்து வெளியிடப்பட்ட ஷா கமிஷன் அறிக்கையை ஆங்காங்கே திரட்டி, 'ஷா கமிஷன் அறிக்கை- தொலைந்ததும், மீட்டதும்' என்று புத்தகம் வெளியிட்டவர் தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. செழியன்தான். அதுவும் அவசரகால நிலை முடிந்து 30 வருடம் கழித்துத்தான் அதை அவரால் செய்ய முடிந்தது.

இந்த நெருக்கடி நிலையைத்தான் இப்போது பா.ஜ.க.வின் மூத்த தலைவரும் முன்னாள் துணை பிரதமருமான எல்.கே. அத்வானி நினைவூட்டியிருக்கிறார்.

பிரதமர் மோடி பதவிக்கு வந்த பிறகு அமைதியாக இருக்கும் அவர் சமீபத்தில் திடீரென்று, 'இனியொரு முறை இந்தியாவில் அவசரகால நிலை வராது என்பதற்கு உத்தரவாதம் இல்லை' என்ற ரீதியில் பேட்டி கொடுத்தார்.

இப்பேட்டி மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பியது. எதிர்கட்சிகள் எல்லாம் 'நரேந்திரமோடியின் ஆட்சி பற்றித்தான் இப்படிக் கூறுகிறார் அத்வானி' என்று கருத்துத் தெரிவித்தன. ஆனால், கொடுத்த பேட்டியை 24 மணி நேரத்துக்குள் மாற்றிக் கொண்ட அத்வானி, 'சோனியாவும், ராகுல் காந்தியும் அவசரகால நிலைக்காக இதுவரை மன்னிப்புக் கேட்கவில்லை. அவர்களை மனதில் வைத்துத் தான் அந்தக் கருத்தை சொன்னேன்' என்று கூறிவிட்டார்.

அத்வானி போன்ற மூத்த தலைவர், அதுவும் அவசரகாலநிலையில், 19 மாதம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தலைவரிட மிருந்து இதை மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், அவசரகால நிலைக்கும் அப்போது ஆட்சி அதிகாரத்தில் இல்லாத சோனியா, ராகுலுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பதே மற்ற கட்சித் தலைவர் கள் கேட்கும் கேள்வி.

இந்திய அரசாங்கத்தில் 'எல்லாம் மோடி மயம்' என்ற இமேஜ் உருவாக்கப்படுகிறது. குறிப்பாக பல தலைவர்களும், 'மோடியின்றி அரசில் ஓர் அணுவும் அசையாது' என்று விமர்சித்து வருகிறார்கள். இந்த விமர்சனத்தின் எதிரொலியாகத்தான் அத்வானியின் கருத்து முதலில் இருந்தது. ஆனால், ஆர்.எஸ்.எஸ். இயக்கம் மற்றும் பா.ஜ.க.வில் உள்ள முக்கியத் தலைவர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக அத்வானி 'அவசரகால நிலை பற்றிய தன் கருத்திலிரு ந்து மாறிவிட்டார்' என்பதுதான் டெல்லி வட்டாரச் செய்தி.

ஆனால், 'ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுக்கும் தலைவர்கள் இந்தியாவில் குறைந்து கொண்டே போகிறார்கள்' என்ற தன் கருத்தை அத்வானி திரும்பப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எது எப்படியோ 1975 இல் இந்தியாவில் வந்த எமேர்ஜென்ஸி பற்றி இன்றைக்கு 2015 இல் 'பசுமையானதொரு' விவாதத்துக்கு வழி வகுத்துக் கொடுத்துவிட்டு அமைதியாகி விட்டார் அத்வானி.

இன்றைக்கும் திட்டக் கமிஷன் ஒழிக்கப்பட்டுவிட்டது. நீதித்துறைக்கும்- அரசுக்கும் 'நீதிபதிகள் நியமனம்' தொடர்பான ஆணையத்தால் சர்ச்சை எழும்பி, இப்போது அது உச்சநீதிமன்றத்திலேயே வழக்காடப்பட்டு வருகிறது.

ராஜ்ய சபையில் ஆளுங்கட்சியாக இருக்கும் பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை இல்லாததால் எந்த மசோதாவையும் தங்கள் இஷ்டத்துக்கு கொண்டு வந்து நிறைவேற்ற முடியவில்லை. இப்படி பல்வேறு பிரச்சினைகள் நிர்வாக ரீதியாக ஆளவட்டம் போட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இதுபோன்ற சூழலில் அத்வானியின் பேச்சை சற்று அச்சத்துடனையே மற்ற கட்சி தலைவர்கள் பார்த்தார்கள்.

ஆனால், அன்றைக்கு இருந்ததை விட இன்றைக்கு ஜனநாயகம் பன்மடங்கு முதிர்ச்சியடைந்துவிட்டது. மக்கள் பெரும் விழிப்புணர்வு பெற்று இருக்கிறார்கள். ஆகவே இனியொரு முறை 'நெருக்கடி நிலை' என்பதெல்லாம் இந்தியாவில் நடக்காது என்றே அரசியல் தலைவர்கள் எண்ணுகிறார்கள்.

மக்கள் மத்தியிலும்கூட அந்த எண்ணமே மேலோங்கி நிற்கிறது. ஆனாலும் அத்வானி சார்ந்த ஆளுங்கட்சியே ஆட்சியிலிருப்பதால் 'அவசரகால நிலை பற்றிய அவரின் கருத்து' ஒரு எச்சரிக்கை மணி போலவே பார்க்கப்படுகிறது.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜூலை 22-28
# பனை அபிவிருத்தி வாரமாக வடமாகாணத்தில் பிரகடனம்

பனைவள அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கோடு வடமாகாண பனை அபிவிருத்தி வாரமாக ஜூலை 22 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதி பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாக விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பனைவளம் போர்க் காலத்தில் பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. பதுங்கு குழிகளை அமைப்பதற்கும், காப்பரண்களை அமைப்பதற்கும் இலட்சக்கணக்கான பனை மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டதோடு, பல்குழல் எறிகணை வீச்சுகளாலும் பல்லாயிரக்கணக்கான பனைமரங்கள் சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளன. போருக்குப் பின்னரும் பனை மரங்கள் அனுமதியின்றிப் பெருமளவுக்கு அழிக்கப்படுகின்றன. இது இயற்கைச் சூழலின் சமநிலையை, குறிப்பாக காட்டு வளம் இல்லாத யாழ். குடாநாட்டின் சூழலைப் பெரிதும் பாதிப்பதாக உள்ளது.

தமிழ்மக்களின் பண்பாட்டைப் 'பனைப் பண்பாடு'என்று சொல்லும் அளவுக்கு உணவு முதல் உறையுள் வரை எமது வாழ்வியலில் பிரதான இடம் பிடித்து வந்த பனைவளம் தற்போது எமக்கு அந்நியமான ஒரு வளமாக மாறியுள்ளது. பனைப் பொருட்களின் பயன்பாடு அருகி வருவதன் காரணமாக, இப்பனை வளத்தைத் தொழில் மூலாதாரமாகப் பயன்படுத்தி வந்த மக்கள் திரளின் பொருளாதாரம் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது.

இவற்றைக் கருத்திற் கொண்டு பனை வளத்தைப் பெருக்கவும், நவீன காலத்துக்கு ஏற்ப பனைப் பயன்பாட்டை நுகர்வோரை ஈர்க்கும் வகையில் அபிவிருத்தி செய்யவும், இதன்மூலம் பனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும் அறிஞர்களினதும் பொதுமக்களினதும் கவனத்தை ஈர்க்கும் விதமாக ஆண்டுதோறும் தாலகாவலர் அமரர் கலாநிதி கந்தையா கனகராசாவின் நினைவு தினமான ஜூலை 22 ஆம் திகதியில் இருந்து ஒரு வார காலப் பகுதியை வடமாகாண பனை அபிவிருத்தி வாரமாகக் கடைப்பிடிப்பதற்கு வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அமரர்கலாநிதி கந்தையா கனகராசா பனை அபிவிருத்திச் சபை தோற்றம் பெறுவதற்கு முன்பாகவே, தனி ஒருவராக வடக்கு, கிழக்கு பூராகவும் பனை விதைகளை விநியோகித்து பனந்தோப்புகள் உருவாக காரணமாக அமைந்தவர். இவர் பனம் தொழில் முனைவோரிடம் இருந்து பனைசார் உற்பத்திகளைக் கொள்வனவு செய்து பிறருக்கு அன்பளிப்பாக வழங்கியதன் மூலம் பனம் தொழில் முனைவோரின் வாழ்வாதாரத்துக்கு. ஆதாரமாக இருந்ததோடு, பனை உற்பத்திகளின் அறிமுகத்துக்கும் காரணமாக அமைந்தவர் ஆவார். இவர் பனை அபிருத்திச் சபையின் இயக்குநர்களில் ஒருவராகவும் இருந்து பனை அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியவர். இவர் ஆற்றிய பணிகளுக்காக அமரத்துவத்தின் பின்னர் இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. தாலகாவலரான அன்னாருக்கு உயரிய கௌரவம் வழங்கும் பொருட்டே வடமாகாண பனை அபிவிருத்தி வாரத்துக் குரிய காலப்பகுதியாக . அவரது நினைவு தினமான ஜூலை 22 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கலாநிதி ஸ்ரீ தர்ஷனனுக்கு ஜனாதிபதியின் தேசியவிருது



ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவால் அறிவிக்கப்பட்ட ,தேசிய விருதான "தேஷபந்து", இசைத் துறையில் சிறந்த சேவையை நாட்டுக்கு வழங்கியமையை கௌரவித்து, ஜனாதிபதியின் பிரதிநிதியான, நீதியமைச்சரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமாகிய விஜயதாஸ ராஜபக்ஷவால் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் கடந்த 21 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீ தர்ஷனனுக்கு வழங்கப்பட்டது.

இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் ஸ்தாபகரும், செயலாளரும், ஜேர்மனிய சட்ட ஆலோசகருமாகிய தேஷமான்ய MTS ராமச்சந்திரனின் பரிந்துரையிலும், ஏற்பாட்டிலும் இவ்விருது வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டது. (இ)


## யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

இன்று தீர்த்தத் திருவிழா



தீர்த்தமாடி வரும் கலட்டி வீரகத்தி விநாயகரே
தீர்த்திடுவீர் எங்கள் பாவ வினைகளையெல்லாம்
கீர்த்தி மிக்க கணபதியே ஆனைமுகப் பெருமானே
சிவன் பார்வதி பெற்றெடுத்த பானை வயிற்றோனே
பார்த்திருப்போம் உனது அருட்காட்சிதனையே!
பாலசுப்பிரமணியனின் அண்ணனே ஆனைமுகனே
நேர்த்திகள் செய்தோம் நின்மலனே கணபதியே!
சீரான வாழ்வருள்வாய் கஜமுகனே சரணம்!! சரணம்!!

நாச்சிமார் கோவிலடி
கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த
ஆயுர்வேத வைத்தியசாலை)

(C-1281)






சுவையுடன் ஆரோக்கியம் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு தகுந்த ஐஸ்கிறீம் வகைகளை தயாரித்து வழங்கும் எமது நிறுவனம் நயினாதீவில் அன்னை நாகபூஷணியின் திருவிழா காலத்தில் தற்காலிக விற்பனை நிலையத்தை அமைத்துள்ளோம். வனிலா, சொக்லேட், ஸ்ரோபெரி, அப்பிள், பிளாக்கரண்ட, பட்டர்ஸ் கொச், கேசர், பிஸ்தா, சப்ரோன், புளூ வெரி, ராஸ்பெரி, பெப்பிமென்ட், பாதாம், புருட் அன்ட் நட்ஸ் மற்றும் Low sugar ஐஸ்கிறீம் மற்றும் மில்க் சொக் வகைகளை சுவைத்து மகிழ வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Sylo Ice Cream இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு எட்டாம் திருவிழா



### நாகேஸ்வரி தாயே!

நயினையிலே வீற்றிருக்கும்
நாகபூஷணித் தாயே!
நாட்டினிலே நல்லமுறை—வர
அருள் புரிவாயே
சமுத்திரம் கடந்து வந்து
சனத்திரளுடன் வழிபட்டோம்
சாந்த குணம் மனிதருக்கு —வர
வரமளிப்பாயே!
அமுதசுரபியிலே அள்ளஅள்ள குறையாது போல
அம்மா! உன் அருளும் ஆசியும்
எப்பொழுதும் சகல ஜீவராசிகளுக்கும்
கிடைக்க வேண்டுமம்மா!

வாகீசன் கோமளா
அல்வாய் வடக்கு

### அடியார் வரம் காப்பாய் தாயே

அலைகடல் நடுவே வீற்றிருக்கும் நாயகியே
அகில மெல்லாம் அருளாட்சி புரியும் தாயே
நயினைதீவில் வீற்றிருக்கும் நாயகியே
நாடிவரும் அடியவரின் குறைதீர்க்கும் தாயே—உன்
தீர்த்தம் தன்னின் நீராடும் அடியவரின்
தீராத பாவங்களை தீர்க்கும் தாயே
அழகுக்கொரு ஆனந்த நாயகியே
அடியார் வரம் காப்பாய் தாயே

தி. மித்திரன்
சில்லாலை மேற்கு,பண்டத்தரிப்பு

### அருள் தரும் அகிலாண்டேஸ்வரி

அகிலாண்டேஸ்வரியே
அகிலம் எங்கும் உன் ஆட்சியே
நம் குறை கூற
ஓடோடி வந்தோம் அம்மா
நம்முகம் பாரம்மா
நம்கரம் கொண்டு உன்னை பூஜித்தோம்
அருள் தாரும் அம்மா
அகந்தையும் மமதையும்
மலிந்திட்ட இவ்வுலகில்
வாழ வழி கூறும் அம்மா

நீ.கவிஅழகன்
தாவடி

### ஆதாரம் நீ தானே!

அமலனுக்கு அமுதளித்த– அமுதசுரபியே
அடியவர்கள் குறை தீர்க்கும்—அன்னபூரணியே
அகிலத்தை காக்க வேண்டும்—ஆனந்த ரூபினியே
ஆதாரம் நீ தானே நயினையின் நாயகியே!

சுகன்யா செல்லத்துரை
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கற்பித்தல் உபகரணக் கண்காட்சியை ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளரும் பழைய மாணவருமான செ.நாகரட்ணம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் விஞ்ஞான பாட மற்றும் நடனபாட கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# கூட்டத்தில் முரண்பாடு ரத்னதேரர் வெளிநடப்பு

(கொழும்பு)

**கட்சித் தலைவர் கூட்டத்தில் ஏற்பட்ட முரண்பாட்டு நிலைமை காரணமாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், கூட்டத்தை விட்டு வெளிநடப்புச் செய்துள்ளார்.**

20ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக தேர்தல் முறைமை மாற்றம் குறித்த நாடாளுமன்ற விவாதம் நடத்துவதற்காக நேற்று முன்தினம் கட்சித் தலைவர் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் முரண்பட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டதனைத் தொடர்ந்து அத்துரலிய ரத்ன தேரர் கூட்டத்தை விட்டு வெளியேறியுள்ளார்.

தேர்தல் முறைமை மாற்றம் குறித்து இரு நாட்கள் விவாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும் இந்தத தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார.

நாடாளுமன்ற மரபுகளை மீறி தேர்தல் முறைமை மாற்றம் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அத்துரலிய ரத்ன தேரர் கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

20ஆம் திருத்தச் சட்டத்தை சீர்குலைக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்து வருகின்றது.

இந்த விடயம் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் தெளிவாக வெளிப்பட்டது.

இதன் காரணமாகவே கட்சித் தலைவர் கூட்டத்தில் அதிருப்தியை வெளியிட்டு, கூட்டத்திலிருந்து வெளியேறினேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## அதிவேக வைபை சேவையை வழங்கி தாய்லாந்து விமானநிலையம் சாதனை

(பாங்கொக்)

உலகிலேயே மிக அதிவேகமான வைபை இண்டர்நெட் சேவையை வழங்கி தாய்லாந்து விமான நிலையம் சாதனை படைத்துள்ளது.

வைபை இண்டர்நெட் வேகத்தை மதிப்பீடு செய்து வரும் பிரபல இணைய தளமானரோட்டன்வைபை. கொம் ஒரு ஆய்வை நடத்தியது. உலகம் முழுவதிலும் உள்ள 130 நாடுகளின் முக்கிய விமான நிலையங்களில் வழங்கப்பட்டு வரும் வைபை இண்டர்நெட் வேகத்தை பற்றி ஆராய்ச்சி செய்தது.

அதில் தாய்லாந்து நாட்டின தலைநகர் பாங்கொக்கின் சுவர்ணபூமி விமான நிலையத்தில் வழங்கப்பட்டு வரும் வைபை சேவை அதிக வேகத்தை பதிவு செய்துள்ளது.

அங்கு ஒரு நொடிக்கு 41.45 எம்.பி.பி.எஸ். வேகத்தில் இண்டர்நெட் சேவை வழங்கப்படுகிறது.

இரண்டாவது இடத்தில் 30.98 எம்.பி.பி.எஸ். வேகத்துடன் அமெரிக்காவின் சத்தானோக விமான நிலையம், மூன்றாவது இடத்தில் 19.45 எம்.பி.பி.எஸ். வேகத்துடன் அயர்லாந்தின் டப்லின் விமான நிலையம் உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இசையமைப்பாளர் ஜேம்ஸ் ஹார்னர் விமான விபத்தில் சிக்கி உயிரிழந்தார்

டைட்டானிக், அப்போலோ 13 உள்ளிட்ட புகழ்பெற்ற ஹோலிவுட் படங்களுக்கு இசையமைத்த இசையமைப்பாளர் ஜேம்ஸ் ஹார்னர் விமான விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

ஃபீல்ட் ஒஃப் ட்ரீம்ஸ், பிரேவ் ஹார்ட், டைட்டானிக், ஏலியன்ஸ், அப்போலோ,13, அவதார், எ பியூட்டிஃபுல் மைண்ட், ஸ்டார் ட்ரெக் பாகம்- 1, 2 போன்ற படங்களுக்கு இசை அமைத்தவர் ஜேம்ஸ் ஹார்னர் (வயது61).

அமெரிக்க மாகாணமான கலிபோர்னியாவில் உள்ள சாண்டா பார்பரா அருகே நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை தனது சொந்த விமானத்தில், ஹார்னர் பயணித்துக் கொண்டிருந்த போது அவரது விமானம் விபத்துக்குள்ளானது.

இந்த பயங்கரமான விபத்தில், ஹார்னர் பலியானது உறுதி செய்யபபட்டதாக அவரது உதவியாளர் சில்வியா பாட்ரிக்ஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் தனது பேஸ்புக்கில் குறிப்பிட்ட நிலைத் தகவலில, "மிகவும் அருமையான பெருந்தன்மை வாய்ந்த மாபெரும் ஆற்றல் கொண்டவரை இழந்து விட்டோம். அவர் தனக்கு விருப்பமானதை செய்து கொண்டிருக்கையிலேயே உயிரிழந்துவிட்டார்.

ரசிகர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி" என்று தெரிவித்துள்ளார்.

ஜேம்ஸ் ஹார்னர் தனது சொந்த விமானத்தை ஓட்டிக் கொண்டு சென்றபோது விபத்து நேரிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும் விபத்துக்கான காரணம் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை.

2 முறை ஒஸ்கார் விருது, 4 கிராமி விருதுகள், கோல்டன் க்ளோப் என ஜேம்ஸ் ஹார்னர் பெற்ற விருதுகளின்பட்டியல்நீண்டு கொண்டே போகும்.

இவர் இசை அமைத்த டைட்டானிக் திரைப்படம் 11 ஒஸ்கார் விருதுகளை பெற்றது. அப்படத்தின் இயக்குநர் ஜேம்ஸ் கேமரூன், ஒரு விழாவில் பேசும்போது, இந்த விருதுகள் படத்தின் இசை அமைப்பாளர் ஜேம்ஸ் ஹார்னரையே சாரும்.

நான் ஒரு கப்பலை மட்டுமே உருவாக்கினேன். அதற்கு இசை மூலம் உயிர் கொடுத்தது ஹார்னர் என்று பெருமிதத்துடன் கேமரூன் தெரிவித்தார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா

(ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு பரிசோதகர்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை மு.ப.10மணியளவில் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சந்திரசேகரம் சதானந்தீஸ்வரன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் சதானந்தீஸ்வரன் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை பி.ப.2மணி தொடக்கம் பி.ப.4மணி வரை Hendon Cemetery &Crematorium,Holders Hill Road,London NW7 1NB,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி தர்மலிங்கம் புனிதவதி

முல்லைத்தீவு செம்மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் புனிதவதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை செம்மலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் செம்மலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவபாதம் கனகேஸ்வரி

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம். கனகேஸ்வரி நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப.10மணியளவில் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.




### ஞானப்பிரகாசம் ஞானதயாளன்

(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா கரப்பன்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் ஞானதயாளன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருவுடல் இன்று புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருநாவுக்கரசு திருகரன்

மல்லாகம், நீதிமன்ற வீதியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, பெரேரா ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு திருகரன் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை காலை 7மணி முதல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 2மணியளவில் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி நிக்கலஸ் லில்லிமலர்

இல.23,6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மலரகம், வளன்புரம்,கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் இல.05,பண்ட் வீதி ஹெந்தளை,வத்தளையைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நிக்கலஸ் லில்லிமலர் கடந்த 21ஆம் திகதி அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 10மணிக்கு கொழும்புத்துறை வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### சந்திரசேகரம் சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

தும்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவை வசிப்பிடமாகவும் தற்போது ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய சந்திரசேகரம் சிவப்பிரகாசம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை 59,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.10மணியளவில் யாழ்.வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 224**

## பொறாமையிலிருந்து விடுதலை!

சமூகம், உங்களை அதற்குத் தெரிந்த பழக்கமான வடிவ அமைப்புகளிலும், அதனால் கையாள முடிந்த பழக்கமான துயரங்களிலும் ஏற்கனவே பலமுறை நடந்து தேய்ந்த பாதைகளிலும், இழுக்கக் காத்துக்கொண்டிருக்கிறது.

இந்தப் பாதையில் விழுவது மிகவும் சுலபம்; அதற்குத் துணிவு தேவையில்லை.

ஆனால், அதிகமாக நடக்கப்படாத ஆன்மீகப் பாதையில் நடப்பதற்குத் துணிவு தேவை.

நான் துணிவு என்று சொல்லும் பொழுது, சாதாரணமான துணிவைச் சொல்லவில்லை, முழுமையான துணிவைச் சொல்கிறேன்.

நரிக்குறவர்களின் பாசிமணி மாலையை அணிவதற்கு தைரியம் தேவையில்லை; ஆனால், ருத்ராக்ஷ மாலையை அணிவதற்கு தைரியம் தேவை.

ருத்ராக்ஷ மாலையை அணிய விருப்பும் பக்தர்களுக்கு, நான் அதைக் கொடுப்பதுண்டு. ருத்ராக்ஷ மணிகள் சக்தியைச் சேமித்து வைத்துக்கொள்ளும்.

அவை உங்களுக்காக பிரபஞ்ச சக்தியை சேமித்து வைத்துக்கொள்கின்றன. அவை மின்கலம் போன்று சக்தியைச் சேமித்து, உங்கள் சக்தி குறையும் பொழுது உங்களுக்கு மீண்டும் சக்தியை அளிக்கிறது.

ஆனால், சமூகம் இந்த மாலையை சந்நியாசத்தின் தெளிவான அறிகுறியாகப் பார்க்கிறது! அது துறவின் அர்த்தத்தைக்கூடப் புரிந்துகொள்ளா மல் இவை துறவிகளால் மட்டுமே அணியப்படுகிறது என்ற கண்ணோட்டத்திலேயே இருக்கிறது.

அது குடும்ப வாழ்க்கையிலிருந்துகொண்டு ருத்ராக்ஷம் அணி வதை கண்டனம் செய்கிறது. ஆனால், ருத்ராக்ஷ மாலையை அணிந்திருக்கும் விக்கிரகத்தையோ அல்லது சாதுவையோ கண்டால் மகிழ்ச்சியடைந்து பிரார்த்தனை செய்கிறது.


என்னுடைய இளம் பக்தர்கள் பலர் ருத்ராக்ஷ மாலையை அணிவதற்கு அவர்கள் வீட்டில் எவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்பதை என்னிடம் வந்து சொல்கிறார்கள்.

இந்த வீண் பேச்சு பேசுபவர்கள் அனைவரும் இதைப் பற்றிக் கதைகளையும் பரப்புவர். இது அபத்தமாக இல்லை? அவர்கள் பிரார்த்தனை செய்யும் பொழுது, பிரபஞ்ச சக்தியிடம் பிரார்த்திக்கிறார்கள்; ஆனால், அதே சக்தி எளிமையான வடிவில் கிடைக்கும் பொழுது அதை ஏற்கத் தயாராக இல்லை! அவர்கள் அதை நோக்கிப் பிரார்த்தனை செய்கிறார்கள்; ஆனால், அதை விட்டுவிலகி ஓடி விடுகிறார்கள்!

இதை நீங்கள் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், மிகவும் அபத்தமாகவும் பொருள்ளதாகவும் தோன்றும். அவர்கள் தங்களை மிகவும் தெளிவாகக் கடவுளிலிருந்து வேறுபட்டவர்களாக காண்கிறார்கள்; அதுதான் பிரச்சினை. அவர்கள் தாங்கள் கடவுள் என்பதை ஏற்கத் தயாராக இல்லை.

நான் இப்பொழுது சொல்கிறேன்: உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களோ இல்லையோ, நீங்கள் விருப்புகிறீர்களோ இல்லையோ, நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ, நீங்கள் கடவுள்தான். இதுதான் விஷுத்தி சக்ரத்தின் அடிப்படையும் கூட- உங்களுடைய தனித்துவத்தையும் முடிவற்ற ஆற்றலையும் கண்டு பிடிப்பது.

உங்களுடைய தைரியம் வளரும்பொழுது சமூகம் தானாகவே தேய்ந்து முக்கிமற்றதாகி விடும். உங்களுடைய தைரியம் குறைவாக இருக்கும்பொழுது சமூகம் உங்கள் மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்தும். (தொடரும்)





**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### சொத்துக்களில் சரிபாதி கேட்ட மனைவி: நூதன முறையில் பிரித்து கொடுத்த கணவன்

ஜேர்மனியில் நபர் ஒருவர், விவாகரத்துக்கு பிறகு தனது மனைவி சொத்துக்களில் சரிபாதியை கேட்டதால் நூதனமான முறையில் அவற்றை பாதியாக வழங்கியுள்ளார்.




ஜேர்மனியில் நபர் ஒருவர் தனது மனைவியிடமிருந்து விவாகரத்து பெற்றுள்ளார்.

இதையடுத்து தனது சொத்துக்களில் சரிபாதியை மனைவிக்கு வழங்க வேண்டும் என்று விவாகரத்து ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்ததால் தன்னிடம் உள்ள பொருட்களில் பாதியை அளிப்பதற்கு பதில் அனைத்து பொருட்களையும் பாதியாக வெட்டி மனைவிடம் கொடுத்துள்ளார்.

மேலும் அவர் பொருட்களை பாதியாக அறுப்பதை வீடியோவாக எடுத்து இணையத்தில் பதிவேற்றியுள்ளார். அந்த பதிவில், உன்னோடு வாழ்ந்த 12 வருட வாழ்க்கைக்கு நன்றி.

என்னிடம் உள்ள பொருட்களில் பாதியை உனக்கு அளித்துள்ளேன் என்று குறிபிட்டுள்ளார்.

மேலும், மீதியை இபே ஆன்லைன் இணையதளத்தில் விற்கவும் செய்துள்ளார்.

பதிவு செய்த சிறிது நேரத்தில், அவரது பாதி காரை 50 டொலருக்கும் அதிகமான விலையில் விற்றுள்ளார்.

தன் சொத்துக்களை வித்தியாசமாக பாதியாக பிரித்து வழங்கிய அந்த வீடியோ இப்போது இணையத்தில் வைரலாகியுள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## சிக்கன் மஞ்சூரியம்



**தே.பொருட்கள்:**

சிக்கன் 1/2 கிலோ

கேப்சிகம் 1

பெரிய வெங்காயம் 1

இஞ்சி ஒரு துண்டு பூண்டு 5 பற்கள் ஸ்பிரிங் ஆனியன் சிறிதளவு சோயா சாஸ் 2 டீஸ்பூன் ஹாட் சில்லி சாஸ் 5 டீ ஸ்பூன் டொமேட்டோ சாஸ் 2 டீஸ்பூன் உப்பு தேவையான அளவு கார்ன் ப்ளார் 4 டீ ஸ்பூன் ஆயில் தேவையான அளவு


**செய்முறை:**

முதலில் சிக்கனை கழுவி அதில் உப்பு, 2 ஸ்பூன் கார்ன் ப்ளார், சில்லி சாஸ் 2 ஸ்பூன், ஊற்றி பிரட்டி 1/2 மணி நேரம் ஊற வைக்கவும். பிறகு ஒரு நாண் ஸ்டிக் பாணில் எண்ணெய் ஊற்றி 5 நிமிடங்கள் பொரித்து எடுக்கவும். பிறகு வெங்காயம், இஞ்சி, பூண்டு, ஸ்பிரிங் ஆனியன் அனைத்தையும் பொடியாக நறுக்கி எண்ணெயில் 3 நிமிடங்கள் வதக்கவும். பிறகு பொரித்த சிக்கனை அதில் சேர்க்கவும். மீதி உள்ள சாஸ் அனைத்தயும் சிக்கனில் சேர்த்து கால் டம்ளர் தண்ணீரில் 2 ஸ்பூன் கார்ன் ப்ளார் கரைத்து ஊற்றி 2 நிமிடம் வைத்து உப்பு சரி பார்த்து இறக்கி பறிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்ஃபி

தஞ்சை பெரிய கோவிலில்...



வி.நிரஞ்சன் - கோப்பாய்

மலேசிய சுற்றுலா...

இந்த வாரத்திற்கான சிறந்த செல்ஃபி



சாமிக்கு அர்ச்சனை ரெடி...




நிரோசன் - பருத்தித்துறை

குட்டி - புவி

1. 2.. 3.. 4....



சயரதன்



சுதர்சன் - நெல்லியடி

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை photosofvalampurii@gmail.com என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்

# புகைப்படப் பொக்கிஷம்



ச.சிறிதரன் - நாவற்குழி

வெட்டியெறியும் வெட்டுக்கிளி



விபுலானந் - யாழ்ப்பாணம்

மயக்கும் மாலைப் பொழுது




நகுலராஜ் - சுழிபுரம்

ரோசாப் பூ சின்ன ரோசாப் பூ...



சிவா - அத்தியடி

கடற்கரைக் காட்சி



லக்ஷன்

வல்லிபுரக் கோயில்



கௌசிகா - போக்கட்டி

நாவில் இனிக்கும் நாவல் பழம்



சி.ரமணன் - புத்தூர்

உதவிக்கு வந்தவரும் சிக்கித்தவிக்கிறார்



விபுலானந் - யாழ்ப்பாணம்

விட்டத்தை பார்த்துத் தூங்கிறதில என்ன சுகம்

அன்பு வாசகர்களே நீங்களும் புகைப்படப் பொக்கிஷத்துக்கு photosofvalampurii@gmail.com எனும் முகவரிக்கு உங்கள் பெயர் முகவரியுடன் புகைப்படம் எடுத்த இடத்தையும் குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் பெரும்பாலான மனிதர்களை தன்னம்பிக்கைதான் பாதுகாத்துவருகிறது.

— ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இரு பெரும் கட்சிகளை உடைக்க சர்வதேசத்தைப் பிரார்த்திப்போம்

பன்றிக் குட்டிகளுக்கு சிவன் பால் கொடுத்த கதை பலரும் அறிந்ததே. பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுப்பதற்காக சிவன் தாய்ப் பன்றியாக உருவெடுத்தார்.

தாயாக வந்து குட்டிகளுக்குப் பால் கொடுப்பதே சாத்தியம் என்பதால் சிவன் அப்படி ஒரு முடிவை எடுத்தார். இதுபோலத்தான் அனைத்து விடயங்களும் நடக்கிறது.

கடவுள் என்பவர் தனது தோற்றத்தில் நேரில் வருவதில்லை. மனித வடிவில் அல்லது உலகில் வாழும் உயிரினங்கள் வடிவில் கடவுள் உதவி செய்கிறார். எனவே நாம் அல்லல்படும்போது யார் எமக்கு உதவுகிறார்களோ அவர்கள் தான் கடவுள்.

இதனால்தான் காலத்தால் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது என்றார் வள்ளுவர்.

சிறிய உதவியாயினும் அது காலம் ;நேரம் கருதிய வகையில் இந்த உலகத்தைவிடப் பெரிது என்று வள்ளுவர் முடிவு செய்தார்.

இதுபோல கொடுத்த கடவுள் எடுக்கவும் தயங்க மாட்டான். எடுப்பதற்கும் கடவுள் தன்வடிவில் வருவதில்லை.

எவர் ஒருவரிடம் என்னென்ன பலவீனம் உள்ளதோ;அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி கடவுள் எடுக்க வேண்டியதை எடுப்பான்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவியைப் பறிக்க நினைத்த கடவுள் சாத்திரி வடிவில் மகிந்தவைச் சந்தித்தான். – சாதித்தான்.

ஆக, கொடுக்கவும் எடுக்கவும் பல்வேறு வடிவங்களில் வரக்கூடிய இறைவன் ;இப்போது இலங்கையில் தமிழர்களுக்கு கொடுக்க சித்தம் கொண்டுள்ளான்போலும்.

அதனால் அவனும் சில திட்டங்களைத் தீட்டி அமுல்படுத்துகிறான். அவன் தீட்டிய திட்டங்களில் ஒன்று இலங்கையில் உள்ள இருபெரும் கட்சிகளை துண்டுதுண்டாக உடைக்க வேண்டும் என்பதாகும்.

இதற்கான கடவுளின் வடிவம் சர்வதேசம். அதாவது உலக நாடுகள் என்பதாகத் தீர்மானித்தான்.

இலங்கையில் சிறுபான்மை இனத்திற்கு உரிமையும் அதிகாரமும் கிடைக்க வேண்டுமாயின் இந்த நாட்டில் பலம்மிக்கதான இரு கட்சிகளும் உடையவேண்டும்–உடைக்க வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் பலம்பொருந்தியவையாக இருக்கும் வரை இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது முடியாத காரியம்.

எனவே இரு பெரும் கட்சிகளை உடைப்பதற்கு–உடைபடுவதற்குரிய நேரம் இதுதான்.

உடைவு என்பது இருபெரும் கட்சிகளும் ஒன்றுசேர்ந்த நிலையில்தான் சாத்தியமாகும். இப்போது இருபெரும் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஆட்சி நடத்துகின்றன.

இந்நிலையில் பாராளுமன்றக் கலைப்பு எந்நேரமும் இடம்பெறலாம் என்ற நிலையில், இரு பெரும் கட்சிகள் உடையக்கூடிய சாத்தியம் நிறையவே உண்டு. இதனைச் செய்வதென்பது தமிழர்களால் ஒருபோதும் சாத்தியமாகாது. அதற்காக அந்தப் பணியில் எங்களுக்கு இட மில்லை என்றும் முடிவு செய்து விடக்கூடாது.

இராமர் கட்டிய பாலத்திற்கு அணில் பிள்ளை உதவியதுபோல எங்கள் உதவியும் இருக்க வேண்டும். அப்போதுதான் இராமர்(கள்) எங்கள் முதுகை தடவிவிடுவார். ஆக, இங்கு இராமர் என்பது சர்வதேசத்தையே குறிக்கும்.

ஆம் ! இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டு இந்த நாட்டில் சமாதானம் ,அமைதி நிலவவேண்டுமாயின் இரு பெரும் கட்சிகளும் துண்டுதுண்டுகளாகஉடையவேண்டும். அப்போதுதான் நல்ல தலைவர்களின் ஆட்சி நிலைக்கும். நீடிக்கும்.

நல்லாட்சி இடம்பெற்றால் அங்கு பிரச்சினைக்கு இடமில்லை என்ற வகையில் இருபெரும் கட்சிகளை உடைக்க, வல்லமை பொருந்திய சர்வதேசத்தை நாம் பிரார்த்திப்போமாக!

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்-கோத்தா

(கொழும்பு)

நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிச் செயற்பாடுகள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிச் செயற்பாடுகளின் காரணமாக அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். போர் நிறைவடைந்துள்ள நிலையிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பும் ஆதரவாளர்களும் தொடர்ந்தும் இயங்கி வருவதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையை மையமாகக்கொண்டு கோத்தபாய ராஜபக்ஷ தனது முகநூல் பக்கத்தில் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து கடந்த அரசாங்கம் மிக நிதானமாக கண்காணித்து வந்தது. இதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் மீள தலைதூக்குவதனை தடுக்க முடிந்தது. 2009-ம் ஆண்டின் பின்னர் தாக்குதல்கள் இடம்பெறவில்லை என்பதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் முற்று முழுதாக அழிந்து விட்டதாக அர்த்தப்படாது.

தனி நாட்டை உருவாக்கும் நோக்கில் இன்னமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் எஞ்சிய உறுப்பினர்கள் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் அரசு வடக்கிலிருந்து இராணுவ முகாம்களை குறைக்கத் தொடங்கியுள்ளது.

மிக முக்கியமான இடங்களில் நிறுவப்பட்டிருந்த முகாம்கள் அகற்றப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு தந்திரோபாய ரீதியாக வழியமைக்கும் அதேவேளை, நாட்டுக்கு பாரிய ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ-11)

# கணக்கெடுப்பு

அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கமைய கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் தொழில் வாய்ப்பற்று தொழில் தேடிக் கொண்டிருப்போரின் சரியான தொகையை கண்டறிந்து அவர்களது சுயவிபரங்களை பெற்று அவர்களுக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கில் தொழில் தேடுவோர் தொழில் வாய்ப்பற்றோர் கணக்கெடுப்பு நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 2.30 மணிவரை கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சகல தொழில் வாய்ப்பற்று தொழில் தேடிக் கொண்டிருப்போர் தமது பதிவுகளை மேற்கொண்டு பயன்பெறுமாறு கரவெட்டி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (இ-3)

# தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வு

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் உள்ள எழுவைதீவு ஜே/39 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத்தேவையில்லை எனவும் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ-3)

# திராட்சை செய்கையாளருக்கான வேலைப்பட்டறை நேற்று யாழில்

யாழ்.மாவட்டத்தில் உள்ள திராட்சை செய்கையாளர்களுக்கான வேலைப் பட்டறை நேற்றையதினம் யாழ்.மாவட்ட விவசாய திணைக்கள பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் திராட்சைப்பழ உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் இந்த வேலைப்பட்டறை இலங்கையில் யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் வருடம் ஒன்றுக்கு 123 ஹெக்டெயர் நிலப்பரப்பில் திராட்சை உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. அதில் ஒரு ஹெக்டயருக்கு 30 தொடக்கம் 35 மெற்றிக்தொன் விளைச்சல் பெறப்படுகின்றது.

ஆனால் இம்முறை 2014/2015 பெரும்போக திராட்சை உற்பத்தியில் 65 ஹெக்டேயர் நிலப்பரப்பில் மிகக் குறைந்த அளவு 8 மெற்றிக்தொன் விளைச்சலே கிடைத்துள்ளது. தெல்லிப்பழை, இளவாலை, அளவெட்டி ஆகிய பிரதேசங்களில் குறைந்தளவு விளைச்சல் கிடைத்துள்ளது டன் 58 ஹெக்டெயர் நிலப்பரப்பில் புத்தூர், உரும்பிராய் ஆகிய பிரதேசங்களில் முற்று முழுதாக விளைச்சல் பெறப்படவில்லை.

திராட்சை உற்பத்தியின் திடீர் வீழ்ச்சியை தெரிந்து கொண்டு உற்பத்தியை மீளவும் அதிகரிப்பதற்கு திராட்சை செய்கையாளர்கள் மற்றும் திராட்சை கத்தரிப்பாளர்களை வரவழைத்து கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இக்கலந்துரையாடலில் பயிரை உற்பத்தி செய்தல், நீர் முகாமைத்துவம், பசளை முகாமைத்துவம், திராட்சை கத்தரித்தல், தரமான பழங்கள் உற்பத்தி, பூச்சி பீடை முகாமைத்துவம், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம், அறுவடைச் சுட்டி ஆகிய கருப்பொருட்களில் விவசாயிகளுடைய அனுபவப் பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றின்மூலம் கிடைக்கும் தொழில்நுட்ப தீர்வுகளை இனம் கண்டு அவற்றை பிரயோகிப்பதன் மூலம் திராட்சை செய்கையை மீள் புத்துயிர் பெறச் செய்வதே இதன் நோக்கமாகும்.

இதில் யாழ்.மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கீ.சிறிபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் வேலைப் பட்டறையில் 15 விவசாய போதனாசிரியர்கள், 3 பாடவிதான உத்தியோகத்தர்கள், 4 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 3 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், 48 திராட்சை செய்கையாளர்கள் மற்றும் 10 திராட்சை கத்தரிப்பாளர்கள் கலந்து கொண்டனர். (இ-9)

# அறநெறிப்பாடசாலையில் வாழும் கலைப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வாழும் கலை அமைப்பின் ஏற்பாட்டில் மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலையில் வாழும் கலைப்பயிற்சி இடம்பெற்று வருகிறது.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை இடம்பெறவுள்ளது.


இப்பயிற்சி தினமும் மாலை 5.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரை நடைபெறுகின்றது.

எளிமையான யோகாசனங்கள் பிராணாயாமம், சக்திவாய்ந்த சுதர்சன கிரியா எனும் மூச்சுப்பயிற்சி, தியானம் ஆன்மீக அறிவு என்பன உள்ளடங்கலாக பெங்களூர் வாழும் கலை ஆச்சிரம ஆசிரியர் டி.சாயிராம் ஜி பயிற்சியை வழங்கி வருகிறார்.

மேலதிக தகவல்களுக்கு 077 430 1925, 077 967 2403 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (இ-3)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## என்றும் உண்மையே பேசுங்கள்



✦ எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும். அப்பொழுதுதான் உண்மையின் ரூபமாகிய இறைவனை காண முடியும். இறைவனிடம் உள்ளப் பூர்வமான பக்தி கொள்ள வேண்டும். அலுவல கத்திலும், வியாபாரத்திலும் உண்மை நெறி தவறக் கூடாது. கபட வேஷத்தையும், ஏமாற்றுவதையும் விட்டுவிட்டு உண்மையே பேசினால் கடவுளைக் காணலாம்.

✦ ஒரு மனிதனுக்குக் கடன் அதிகமாகிவிட்டது, அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவன் பைத்தியம் பிடித்தவன் போல் நடிக்க ஆரம்பித்து விட்டான். வைத்தியனால் குணமும் அடையவில்லை. கடைசியில் கெட்டிக்கார வைத்தியன் ஒருவன் உண்மையைத் தெரிந்து கொண்டான். அந்த போலிப் பைத்தியத்தைத் தனியாக அழைத்துச் சென்று "அடேய்! நீ என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்! பைத்தியமாக நடித்துக் கொண்டிருந்தால், உண்மையாகவே உனக்குப் பைத்தியம் பிடித்து விடும். இப்பொழுது உன்னிடம் பைத்தியத்திற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஜாக்கிரதையாக இரு!" என்று எச்சரித்தான். இதைக் கேட்ட அந்த மனிதன் பயந்துபோய் பைத்தியமாக நடிப்பதை விட்டுவிட்டான். எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் உண்மை ஒருநாள் வெளிவந்தே ஆகவேண்டும்.

✦ பொய், அனைத்தையும் விட கெட்டது. பொய் வேஷம் போடுவதும் கெட்டதே. ஒருவன் பொய் பேசுவதில் விருப்பம் கொண்டால், பொய்யின் மேலுள்ள பயம் அவனுக்குப் போய்விடும். வாய்மையே வெல்லும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குமரகுருபரன் வி.கழகத்தின் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## சுப்பர் ஓவரில்

## நீர்வேலி ஐக்கியம் அணியை வீழ்த்தி சம்பியனாகியது மட்டுவில் கண்ணகை

**ஸ்ரீ குமரகுருபரன் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் சுப்பர் ஓவரில் நீர்வேலி ஐக்கியம் அணியை வீழ்த்தி சம்பியனானது மட்டுவில் கண்ணகை அணி.**

ஸ்ரீ-குமரகுருபரன் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து சுற்றுப்போட்டியின் மாபெரும் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் மட்டுவில் கண்ணகை மற்றும் நீர்வேலி ஜககியம் ஆகிய அணிகள் மோதின.

இப்போடியின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் இணைப்பாளரும் வடமாகாண சபை உறுப்பினருமான இ.ஆனோல்ட். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணகல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் பிரத்தியேக செயலாளர் க.சண்முகநாதன், புத்தூர் கிழக்கு பிரதேச கிராமசேவை உத்தியோகத்தர் வீ.கோபாலதாஸன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டுவில் கண்ணகை முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதன் அடிப்படையில் துடுப்பெடுத்தாடிய நீர்வேலி ஐக்கியம் 14 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களைப்பெற்றது.

அணி சார்பில் அதிகபட்சமாக ஜகன் 15 பந்துகளில் 37ஓட்டங்களையும் முகுந்தன் 10 பந்துகளில் 13 ஓட்டங்களையும் பிரதீப் 7 பந்துகளில் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் செந்தூரன் 3 இலககுகளையும் தனுயன் 2 இலக்குகளையும் கௌசிகன் மற்றும் ஜெசிதலா ஒரு இலக்கினையும் கைப் பற்றினர்.

தொடர்ந்து 105 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய மட்டுவில் கண்ணகை 15 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 104 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து போட்டி சமநிலையடைந்தது இதை தொடர்ந்து இரு அணிக்கும் பிரத்தியேகமாக ஒரு பந்துப்பரிமாற்றம் வழங்கும் நிலை ஏற்பட்டது.


அணி சார்பில் அதிகபட்சமாக அணித்தலைவர் கோபி 29 பந்துகளில் 33 ஓட்டங்களையும் வினோதன் 10 பந்துகளில் 14 ஓட்டங்களையும் இளங்கோ 14 பந்துகளில் 13 ஓட்டங்களையும் கௌசிகன் 15 பந்துகளில 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டி சமநிலையடைவதற்கு 15 வது பந்துப்பரிமாற்றத்தில் 5-வது பந்தில் கௌசிகனால் பெறப்பட்ட 6 ஓட்டங்களால் ஆட்டம் சமநிலை அடைந்தது. 6-வது பந்தில் ஒரு ஓட்டம் பெற்றால் வெற்றி எனும் நிலையில் போட்டி மேலும் விறுவிறுப்பை அடைந்தது. 6-வது பந்தில் கௌசிகன் ஓட்டம் பெறமுயனற வேளை ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க போட்டி சமநிலையடைந்தது.

பந்துவீச்சில் மதுலதாஸ் 3 இலக்குகளையும் குகன் 2 இலக்குகளையும் திசோகன் மற்றும் பிரதீப் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து பிரத்தியேகமாக வழங்கப்பட்ட ஒரு பந்துப்பரிமாற்றத்தில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை 10 ஓட்டங்களைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நீர்வேலி ஐக்கியம் 8 ஓட்டங்களைப்பெற்று 2 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (க)





# ஆறுதல் வெற்றிபெறுமா இந்தியா? பங்களாதேஷுடன் இன்று பனிப்போர்

இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷ் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான ஒரே ஒரு டெஸ்ட் போட்டி மழையால் இரத்து செய்யப்பட்டது.

3 ஒருநாள் போட்டித் தொடரில் முதல் 2 போட்டியில் தோற்று இந்திய அணி தொடரை இழந்தது. முதல் முறையாக இந்திய அணி பங்களாதேஷிடம் ஒருநாள் தொடரை இழந்துள்ளது.

இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதும் 3-வது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி டாக்காவில் இன்று (புதன்கிழமை) நடைபெறவுள்ளது.

பங்களாதேஷிடம் இந்திய அணி மோசமாக விளையாடி தொடரை இழந்ததால் வீரர்கள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

முதல் ஆட்டத்தில் 79 ஓட்டத்திலும், 2-வது போட்டியில் 6 விக்கெட் வித்தியாசத்திலும் தோற்றது. இதனால் இன்றைய ஆட்டத்திலாவது இந்தியா வெற்றி பெற்று ஆறுதல் பெறுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணிக்கு நன்மை பயக்கும் என்றால் அணித்தலைவர் பதவியை துறக்க தயார் என்று டோனி அறிவித்த நிலையில் இந்த ஆட்டம் நடக்கிறது. துடுப்பாட்டம். பந்துவீச்சு முற்றிலும் மோசமான நிலையில் இந்திய அணி இருக்கிறது.

பங்களாதேஷ் புதுமுக வேகப் பந்து வீரர் முஸ்தாபி சுர் ரகுமான் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு கடும் சவாலாக இருக்கிறார்.

அவர் முதல் 2 ஆட்டத்திலும் சேர்த்து 11 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். அவரது பந்தை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றி இந்திய வீரர்கள் தீவிர ஆலோசனையில் உள்ளனர்.

பங்களாதேஷ் அணி கடைசி ஆட்டத்திலும் வென்று 3-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றும் ஆர்வத்தில் உள்ளது. உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு அந்த அணிக்கு கூடுதல் பலமாக இருக்கிறது.

இன்றைய ஆட்டமும் பகல் இரவாக நடைபெறவுள்ளது. இந்திய நேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு போட்டி ஆரம்பமாகும்.

இந்தியா : டோனி (அணித் தலைவர்), தவான். ரோகித் சர்மா, விராட் ஹோலி, ரகானே, ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், உமேஷ் யாதவ், புவனேஸ்வர் குமார், மொகித் சர்மா, குல்கர்னி, அக்ஷர் பட்டேல், அம்பதி ராயுடு, ஸ்டுவர்ட் பின்னி.

பங்களாதேஷ் : மொர்தாசா (அணித்தலைவர்), தமிம் இக்பால், சர்கார், லிட்டன் தாஸ், முஸ்பிகுர் ரகீம், சகிப் அல் ஹசன், சபீர் ரகுமான், நாசிர் உசேன், ரூபெல் உசேன், தர்ஷின் அகமது, முஸ்டாபிசுர் ரகுமான், அராபத் சன்னி, தலுட்கர், மொமினுல் ஹக். (க)

## சண்முகராசா ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலய முன்னால் அதிபர் அமரர் சண்முகராசா ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி - 2015 இன்று 24-ம் திகதி புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)




அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்குமிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் 4-ம் இடத்தினை பெற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக அணியினரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர் வேட்பா...

சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை பிரதமர் வேட்பாளராக நிறுத்தவோ, அவருக்கு தேசியப் பட்டியலில் வாய்ப்போ வழங்கப் போவதில்லை என தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளருடனான சந்திப்பின் போது கூறியிருந்தார்.

இந்நிலையில், கடந்த 19-ம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில், தான் கூறியதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்திருந்தது தவறானது என அவர் ஏற்றுக் கொண்டதாக மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இதன்போது தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக நிறுத்தவோ, அவருக்குத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பத்தை வழங்கவோ அல்லது தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கவோ தாம் தயாரில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதிக்கு கௌரவமான பதவி ஒன்றை வழங்க முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். இந்த கௌரவமான பதவியை மகிந்த ராஜபக்ச ஏற்றுக் கொண்டு இலங்கை சார்பில் வெளிநாடுகளுக்குச் சென்று சர்வதேச தொடர்புகளைக் கட்டியெழுப்ப முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (எ-11)

## இராணுவ முகாம்...

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, கொடிகாமம் இராணுவ முகாம் அகற்றப்பட்டதாக வெளியிட்ட தகவல் தொடர்பிலேயே ரணில் இதனை தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தை பொறுத்தவரையில் சம்பூர் கடற்படை முகாமை மாத்திரம் அது அகற்றியதாக ரணில் குறிப்பிட்டார்.

அதுவும் முன்னைய அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு அமையவே இந்த முகாம் அகற்றப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில் அகற்றப்பட்ட முகாமுக்கு பதிலாக மற்றும் ஒரு முகாம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு வருவதாகவும் இதனால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (எ-11)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

# கடைகளை வாடகைக்கு வழங்குதல் - 2015

மருதனார்மடம் சந்தைத் தொகுதியில் சபையினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைத் தொகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் கூடிய ஒரேமுறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக வலிகாமம் தெற்கு பிரதேசசபை தவிசாளரால் கோரப்படுகின்றது.

| தொ. இல | கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT வரி தவிர்ந்த தொகை) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்கமுடியாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT, NBT வரி தவிர்ந்த தொகை) |
|---|---|---|---|---|
| 1 | இல 1 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 2 | இல 3 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 3 | இல 4 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 4 | இல 5 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 5 | இல 6 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 6 | இல 7 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 7 | இல 12 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 8 | இல 13 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 9 | இல 14 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 10 | இல 15 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 11 | இல 17 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 12 | இல 18 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 13 | இல 21 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 14 | இல 22 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 15 | இல 01A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 16 | இல 03A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 17 | இல 04A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 18 | இல 05A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 19 | இல 06A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 20 | இல 07A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 21 | இல 08A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 22 | இல 09A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 23 | இல 10A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 24 | இல 11A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 25 | இல 12A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 26 | இல 15A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 27 | இல 16A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 28 | இல 17A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 29 | இல 18A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 30 | இல 19A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 31 | இல 20A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 32 | இல 21A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 33 | இல 22A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |

நிபந்தனைகள்

1. அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம், மீளளிக்கப்படாத கட்டணங்கள், பெறுமதி சேர்வரி ஆகியவற்றைப் பணமாகச் செலுத்தி ஆள்அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 24.06.2015 திகதியிலிருந்து ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விப் படிவம் இணைப்பிரதிகளில் பெற்று 08.07.2015ம் திகதி மு.ப 12.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமானவை நிராகரிக்கப்படும்.

2. அலுவலகத்தில் இணைப்பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பகாரர் எவ்வித மாற்றங்களும் செய்தல் ஆகாது.

3. படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்கள் விண்ணப்பகாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

4. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப் பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு தவிசாளர், வலிதெற்கு பிரதேசபை, சுன்னாகம என முகவரியிட்டு கேள்வியடங்கிய கடித இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம்.

5. 08.07.2015ந் திகதி மு.ப 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப 2.00 மணியளவில் கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பகாரர் அல்லது அவரின் எழுத்துமூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

6. 08.07.2015ந் திகதி மு.ப 12.00 மணிக்குப் பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கும் விண்ணப்பங்களை உரிய முறையில் சபையில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

8. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்

9. எக்கேள்வியையும் ஏற்றுக்கொள்ளவோ, அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுள்ளது.

10. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் (Defaulters list) அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையிலுள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப் பணம் அரச உடமையாக்கப்படும். பிரதேச சபையுடனான சகல எழுத்து மூல, வாய் மூல தொடர்பாடலகள் யாவும் குத்தகைக்காரராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்.

12. கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக்காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக்கூடிய கேள்வித் தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.

13. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகையின் 11 சதவீத பெறுமதி சேர்வரியாகவும் (VAT) 02 சதவீதம் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வலிதெற்கு பிரதேசசபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

14. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலைமதிப்பீட்டு திணைக்களம் மதிப்பிட்ட தொகையில் கடைக்கான மாதாந்த வாடகையும் பெறுமதிசேர்வரி, தேசததைகட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்த வேண்டும்.

15. மாதாந்த வாடகைப் பணத்தை அந்த மாதம் 30-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப்பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.

16. முற்குறிப்பிடப்பட்ட 14வது 15வது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத் தொகைகள் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

17. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை, சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

18. குத்தகையாளர் தான் நடாத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலிதெற்கு பிரதேசசபையினால் தொகைகுறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்த காலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

19. வாடகைக்கு கொடுப்பவர் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு முறையும் தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அதிகாரம் உண்டு. அதற்கு வாடகைக்காரர் மறுப்பு தெரிவிக்க முடியாது.

20. குத்தகைக்குப் பெற்ற கடையின் மின்சார இணைப்புக்கட்டணங்கள், மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.

21. கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அன்றி உப வாடகைக்குக் கொடுக்கவோ முடியாது.

22. கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருட காலத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களுக்காக நீதி மன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.

- மிகை இலாபம் ஈட்டிய குற்றம்
- நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் சட்டத்தை மீறிய குற்றம்
- சந்தை உப விதிகளை மீறிய குற்றம்

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தி. பிரகாஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(சி-1369)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்செயலில் ஈடுபடுவோரை...

காரியினுடைய கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் நடைபெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்து வதற்கு மன்றினால் சில அறிவுறுத்தல்கள் வழக்கப்படு கின்றன.

ஹ மல்லாகம், சுன்னாகம், ஏழாலை பகுதிகளில் குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது. வீதியோர சண்டித்தனங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது. அவற்றை உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும்.

ஹ அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோரை பிரிவு 81 குற்றவியல் நடவடிக்கை கோவையின் கீழ் கைது செய்து நீதிவான் நீதிமன்றில் ஆஜராக்கி நன்னடத்தை பிணை முறியில் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ ரியூசன் செல்லும் பெண் பிள்ளைகளுக்கு தொந்தரவு கொடுக்கும் நபர்களை அலைந்து திரியும் சட்டத்தின் **(Vagrants Ordinance)** கீழ் கைது செய்து நீதிவான் நீதிமன்றில் ஆஜராக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ சட்டவிரோதமாகக் கூடி ஐந்து நபர்களுக்கு மேல் குற்றச் செயல்களில் ஈடுபடும்போது குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் 140 ஆவது பிரிவின் கீழ் சட்ட வரோதக் குற்றச் சாட்டின் அடிப்படையில் கைது செய்து நீதிவான் நீதிமன்றில் ஆஜராக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ குற்றச்செயல்கள் நடைபெறுகின்ற பிரதான பகுதியென பொலிஸ் புலனாய்வின் மூலம் கண்டு அப்பிரதேசத்திற்குள் தொடர்ச்சியான பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ கத்தி, வாள் என்பன வைத்திருக்கும் நபர்களை அபாயகர மான கத்தி சட்ட நடவடிக்கைகளின் **(Dangerous Knife Ordinance)** கைது செய்து நீதிவான் நீதிமன்றில் ஆஜராக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ குற்றவியல் நடவடிக்கைக் கோவை, தண்டனைச் சட்டக் கோவை, அபாயகரமான ஆயுதங்கள் சட்டம் மற்றும் போதைவஸ்து சட்டங்களின் கீழ் குற்றம் செய்யும் நபர்களை உடனடியாகக் கைது செய்து நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும் என மன்றில் ஆஜராகியிருக்கும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நீதிமன்றம் அறிவுறுத்தல்கள் வழாங்குகின்றது.

அத்துடன் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நடைபெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த ஊர்காவற்றுறை பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு மன்றினால் பின்வரும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

ஹ தீவுப் பகுதியில் வன்செயல் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வந்து சட்ட விரோதக் குற்றம் புரிபவர்கள் அனைவரையும் கைது செய்து நீதிவான் நீதிமன்றில் ஆஜராக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ வேலணை, சாட்டி, மண்கும்பான், அல்லைப்பிட்டி பிரதேசத்தில் கடலோர மண் கடத்தலில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்து கடலோர மன் கடலோர மண் கட்டளைச் சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ குறிக்கப்பட்ட மண் கடத்தலில் ஈடுபடும் ரிப்பர், லொறி, ரக்ரர், மாட்டு வண்டில், லான்மாஸ்ரர் போன்ற வாகனங்களைக் கைப்பற்றி நீதிமன்றின் முன் ஆஜர்படுத்தி சட்டப்படி அரச உடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ தீவுப் பகுதியிலிருந்து யாழ். நகரை நோக்கி ஆடு, மாடுகள் இரவு நேரங்களில் கடத்தப்படுவதைக் கட்டுப்படுத்த அக்குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ அதனைத் தடுப்பதற்கு மண்டைதீவு சந்தி அல்லது பண்ணைச் சந்தியில் பொலிஸ் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடி காவலரண் அமைத்து கடத்தல் நடவடிக்கையை முறியடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ தீவுப் பகுதியில் பனைமரம் வெட்டும் நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்க வேண்டும்.

ஹ வெட்டிய பனைமரங்களை ஏற்றிச் செல்லும் ரிப்பர், லொறி, லான்மாஸ்ரர் போன்ற வாகனங்களைக் கைப்பற்றி சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து வாகனங்களை அரச உடமையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ வேலணை பிரதேச செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர், காரைநகர் பிரதேச செயலாளர் ஆகியோருடன் மிகவும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி மண் கடத்தல், மரக்கடத்தல் என்பவற்றைத் தடுப்பதற்கு நிர்வாக ரீதியாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ ஊர்காவற்றுறை, நாரந்தனை, தம்பாட்டி போன்ற பிரதேசங்களில் வாள்வெட்டில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்கி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ கத்தி, வாள் போன்ற அபாயகரமான பொருட்களை வைத்திருக்கும் நபர்களை அபாயகரமான கத்தி சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹ ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு வரை பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு குற்றச்செயல்களைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் மக்கள் விழிப்புக் குழுக்களை ஏற்படுத்தி குற்றச் செயல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் கீழ் எடுக்க வேண்டும்.

என ஊர்காவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதகாரிக்கும் நீதிமன்றம் அறிவுறுத்தல்களை வழ்ழங்கியது. (எ-9)

# தடைசெய்யப்...

உருவாக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

புலம்பெயர் இலங்கையர்களுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டும் என்பதே மகிந்த ராஜபக்ஷவின் நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கிய கொள்கை.

இந்நிலையில், அவர் செய்ய தவறியதை நாம் செய்கிறோம் என்று மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (எ-11)

# சிறப்பு விசாரணை...

கையளிக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கையில் வித்தியா படுகொலை தொடர்பான விசாரணையில் பொலிஸார் இழைத்த தவறுகள் தொடர்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த சந்தேக நபரை விடுவித்த மூத்த பொலிஸ் அதிகாரியிடம் இந்த சிறப்பு பொலிஸார் விசாரணைகள் எதனையும் நடத்தவில்லை.

இவரிடம் பொலிஸ் தலைமையகம் விசாரணை நடத்தி, அவர் மீது நடவடிக்கை எடுக்கும் என்று பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இவ்வூடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (எ-11)

# நாமலின்...

நான்தான் முதலில் கலந்துகொள்வேன்.

அப்படி இல்லை என்றால் எங்கள் குடும்பத்தில் ஆறு பேரும் கலந்து கொள்வோம். எனினும் நாமல் ராஜபக்ஷ தனது தந்தைக்காக எந்த ஒரு கூட்டத்திலும் கலந்து கொள்வதில்லை.

ஒருவேளை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒழுக்க நெறிகளுக்கமைய செயற்படுகின்றார் என நினைக்கின்றேன்.

அப்படி இல்லை என்றால் மற்றவர்களை முன் நிறுத்திவிட்டு எங்கள் கட்சியை வீணடிப்பதற்கான நடவடிக்கைகள் பின்னால் செயற்படுத்தப் படுகின்றது.

கடந்த காலங்களில் காணப்பட்ட பேதங்களை மறந்து விட்டு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நேரம் உருவாகியுள்ளது.

எப்படியிருப்பினும் மகிந்த தரப்பினரின் பல்வேறு நடவடிக்கைகள் அதற்கு தடையாகவே உள்ளது என்றார். (எ-11)

# சபாநாயகரி...

தேர்தல் முறைமை மாற்றம் தொடரபில் ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கு எதிர்க்கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா பாரிய அளவிலான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

எனினும் அவை அனைத்தையும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நிராக்ரித்துள்ளார் என தெரிவிக்கப் படுகின்றது.

இதற்கிடையில், மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றில் இடம் பெறுகின்ற விவாதங்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. (எ-11)

# நாடாளுமன்...

கம் ஏற்படாத நிலையிலேயே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை அறிவிக்கவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 20-வது திருத்தம் தொடர்பில் தற்போது நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு விவாதம் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)


FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
(C-1371)
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்..
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
கடந்த March மாத DELF A1, A2 Exam இல் 100 % சித்தியடைந்துள்ளனர்...
938 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்..
Register now : 0779 789 456 / 021 221 7781
ஆரம்பம்: 27.06 சனி 2pm No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 29.06 Mon 4pm. No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி.
ஆரம்பம்: 24.06 Wed 4pm கண்டி வீதி, அரசடி, சாவகச்சேரி.

மீண்டும் O/L உடன்
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management
(C-1379)

யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!
கற்கைநெறி ஆரம்பம் ஜூலை 1 புதன்கிழமை காலை 10 மணி
SIKARAM Get Set for Careers & Take off Your Dreams
இதுவரை பதிவுசெய்யாதவர்கள் ஜூன் 30க்கு முன்னர் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளவும்
வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)
Call: 0777 32 4004
021 222 00 11

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள். ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். French Embassy: www.ambafrance-lk.org
ஆரம்பம் விரைவில்... உடன் அழைத்து பதியுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
(932)

BCHS British College of Higher Studies
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
A1 IELTS Life Skills
இப்பாட நெறியானது எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கிகரிக்கப்பட்ட பாடநெறி
Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
(C-1373)
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

சைவ உணவகத்திற்கு வேலைக்கு ஆட்தேவை
தேநீர் தயாரிப்பாளர்
உணவு பரிமாறுபவர் (Supply)
பார்சல் கட்டுபவர்
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது
தொடர்பு 0772495800
(C-1375)

வேலை வாய்ப்பு

நீங்கள் O/L தேர்ச்சி வெற்றவரா? அப்படியானால்
ஒன்றிணைந்த நிறுவனத்தில்
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கிளைகள் 30 றிகு
1.Supervisor
2.Assistant Manager
3.Customers care
4.Manager
ஆகிய துறைகளுக்கு துடிப்பான இளைஞர் யுவதிகளை எதிர்பார்க்கிறோம்
பயிற்சிக் காலங்கள்
06 மாத பயிற்சி வகுப்பு
08 மாத பயிற்சி வகுப்பு
12 மாத பயிற்சி வகுபபு என நடைபெறும்
பயிற்சிக் காலத்தில் ரூபா 8000.00 - ரூபா 15000.00 வரையும் பயிற்சியின் பின்
45000.00 மேல் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்புக்கள்
(C-1374)
0773366453 , 0777981471

பிரயோக ஆங்கிலம்
PRACTICAL ENGLISH
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
வகுப்பிடம் : யாழ்நகர், திருநெல்வேலி
விபரங்களுக்கு : 077 3212711
(இ)

அதிபர் சேவை தரம் -3
விசேட வகுப்புக்கள்
பிரிவு II
புதன்,வியாழன் பி.ப 5.00 - 7.00 மணி வரை
பிரிவு I
ஞாயிறு பி.ப 1.00 - 5.00 மணி வரை
★ ஆரம்ப விடயங்கள் மேலதிக வகுப்புக்களில்
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)
(C-1367)

விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் அரியாலையில்
50 பரப்பு வயல்காணி
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு
0766757548
(934)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.